பக்கங்கள்:12 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 வைகாசி 04 புதன்கிழமை 18.05.2022 கதிர் 194

### இனிது ரகசியம் அல்ல!

இன்று முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தினம். கோட்டா பயவின் கெடுபிடி ஆட்சியின் கீழும் இம்முறை அந்த நினைவேந் தலைச் சுமுகமாக முன்னெடுக்க ஓரளவு வாய்ப்புக் கிடைத்திருக் கின்றது.

புதிய பிரதமர் ரணில் ☞2

## முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் இன்று உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்க ஏற்பாடு




(சண்முகம் தவசீலன்)

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்விற்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தியாகியுள்ளன. உணர்வுபூர்வமாக நினைவேந்தல் நிகழ்வு நடைபெறும்.

'இனவிடுதலை தேடி முள்ளிவாய்க்கால் நோக்கி' என்ற தொனிப்பொருளில் பொத்துவிலிலும் பொலிகண்டியிலும் ஆரம்பித்த நடை பவனிகள் நேற்று மாங்குளத்தில் ஒன்றிணைந்து பரந்தன் ஊடாக வள்ளிபுனத்தை வந்தடைந்தது. கடந்த 2006 ஆம் ☞2

## காலிமுகத் திடல் தாக்குதல்
## 2 எம்.பிக்கள் நேற்றுக் கைது எஞ்சியோரும் கைதாவார்கள்!

சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய முன்னாள் இராஜாங்க அமைச்சர் சனத் நிசாந்த மற்றும் மிலான் ஜெயதிலக ஆகியோர் நேற்று குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 9ஆம் திகதி காலிமுகத்திடல் மற்றும் அலரி மாளிகைக்கு முன்பாக அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் மீது தாக்குதல் மேற்கொண்டமை தொடர்பிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவர், மேலும் இரு நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட 22 பேரை ☞2A

# ஜனாதிபதிக்கு எதிராக பிரதமர் வாக்களிப்பார்!

## அவரே நேற்றுத் தெரிவிப்பு



கொழும்பு, மே 18

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராக எதிர்க்கட்சிகளால் கொண்டுவரப்பட்டுள்ள அதிருப்திப் பிரேரணை விவாதத்துக்கு வரும்போது அதற்கு ஆதரவாகத் தாம் வாக்களிக்கவுள்ளார் எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். ☞2

## பாதிக்கப்பட்ட எம்.பிக்களுக்கு விரைந்து புதிய வீடு கிடைக்கும்

நாட்டில் பல பகுதிகளில் ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்களின்போது பாதிக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு புதிய வீடுகள் வழங்கப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

வன்முறைச் சம்பவங்களின் போது, 71 நாடாளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளுக்கும் சொத்துக்களுக்கும் சேதம் விளைவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய ☞2

## புதிய எம்.பி. நியமனம்

சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் பொலன்னறுவை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துக்கோரள உயிரிழந்தமையை அடுத்து வெற்றிடமாகியுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு பொலன்னறுவை மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஜகத் சமரவிக்கிரம நியமிக்கப்பட்டுள்ளார் என்று தேர்தல்கள் ஆணைக்குழு நேற்று அறிவித்துள்ளது.

கடந்த 9ஆம் திகதி காலிமுகத்திடல் மற்றும் அலரிமாளிகைக்கு முன்பாக ☞2

## பிரதமரின் நடவடிக்கை வெட்கம் கெட்ட வேலை

### ரணிலைத் தாக்குகிறார் சுமந்திரன்

கொழும்பு, மே 18

ஜனாதிபதிக்கு எதிரான அதிருப்திப் பிரேரணையை விவாதத்திற்கு கொண்டுவருவதை தடுக்கும் வகையில் ஆளும் கட்சியுடன் இணைந்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க செயற்பட்டமை வெட்கம் கெட்ட வேலை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் நேற்று நாடாளுமன்றத்தில் சீற்றத்துடன் குறிப்பிட்டார். ☞2A

## யாழில் மோ.சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதி தீப் பற்றி எரிந்தன; 2 பேர் சாவு; 2 பேர் படுகாயம்



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,மே.18

நல்லூர் முடமாவடிப் பகுதியில் நேற்றிரவு நடந்த விபத்தில் இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதி இரண்டு மோட்டார் சைக்கிள்களும் முழுமையாகத் தீப்பற்றி எரிந்தன. அதில் இருவர் உயிரிழந்தனர். மற்றிருவர் படுகாயமடைந்தனர். ☞2A

## ஏழு எம்.பிக்களிடம் வாக்குமூலம் கட்டாயமாகப் பெற நடவடிக்கை

காலி முகத்திடல் அமைதியின்மை தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏழு பேரிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட வேண்டியுள்ளதாக சபாநாயகருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் சபாநாயகருக்கு இது தொடர்பில் கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

காலி முகத்திடல் அமைதியின்மை தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏழு பேர் உள்ளிட்ட 25 பேரிடம் வாக்குமூலம் பதிவு செய்யுமாறு சட்டமா அதிபரினால் குற்றப் புலனாய்வு பிரிவுக்கு ☞2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

விக்கிரமசிங்க வழங்கிய உத்தரவினால் அது சாத்தியமாயிற்று என்றுதான் பலரும் நினைக்கின்றார்கள். அந்த முடிவைத் தாம் பிரதமர் பதவியேற்ற கையோடு ரணில் எடுப்பதற்குக் காரணம் எது அல்லது யார் தெரியுமா?

இது விடயத்தில் சரியான இடம் பார்த்து, சமய சந்தர்ப்பம் கணக்கிட்டு, இலக்கு வைத்துத் தாக்கிய சி.வீ.கே.சிவஞானத்தின் காய் நகர்த்தல்தான் காரணம் என்று நான் நினைக்கிறேன். இது எழுந்தமானத்தில் நான் கூறும் முடிவல்ல. காரண காரியத்தோடுதான் அப்படிக் குறிப்பிடுகிறேன்.

'முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் மக்களின் உரிமை, அதில் தலையிடாதீர்கள், தடுக்காதீர்கள், அனுமதியுங்கள்!' – என்று தமிழ் தலைமைகள் மட்டுமல்ல ஐ.நா. வரை சர்வதேசத் தரப்புகள் திரும்பத் திரும்பப் பல தடவைகள் கூறியும் எப்போதுமே கெடுபிடி பண்ணிக் கொண்டிருந்தது பௌத்த, சிங்களப்பேரினவாதத் தலைமை. இப்போதுதான் ரணில் பதவியேற்றதும் முதல் தடவையாக அந்த நினைவேந்தலைத் தடுக்காதீர்கள் என்று உத்தரவு கொடுக்கப்பட்டிருக்கின்றது. அந்த உத்தரவு வழமையை விட சற்று வித்தியாசமானதாக இருந்தது. முதல் தடவையாக சிங்களத்தின் தலைவர் ஒருவர் அந்த முடிவில் புதிய சொல்லாடல் ஒன்றைக் கையாண்டிருந்தார். அதைப் பார்த்ததும் எனக்குப் பொறி தட்டியது. என்ன, ஏது என்று தேடிப்பார்த்தேன்.

'இறந்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை நினைவேந்துவதற்கு உறவுகளுக்கு முழு உரிமை உண்டு. அதை எவரும் தடுக்க முடியாது' என்று குறிப்பிட்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, கடைசியாக 'நினைவேந்தல் நிகழ்வை ஒட்டி இறந்தவர்களின் ஆன்மாவை (Soul) வைத்து எவரும் அரசியல் செய்யக்கூடாது' என்று குறிப்பிட்டு இருந்தார்.

அவரும் ஒரு சிங்கள பௌத்தரே. கர்ம வினை பற்றிய புத்தரின் உபதேசங்கள் அவருக்கும் தெரிந்திருக்கும். அவரது நெற்றிப்பொட்டில் அடிக்குமாறு இரண்டு தினங்களுக்கு முன்னர் ஆங்கிலத்தில் வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் எழுதிய கடிதம் தான் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் மூளையத்தை அடித்து திறந்து விரைந்து செயற்பட வைத்திருக்கும் என்று நினைக்கிறேன்.

நானும், நீங்களும், நாடும் இன்று இப்படி உத்தரிப்பதற்கு இந்த ஆத்மாக்களுக்கு உரிய கடமைகளை, கடப்பாடுகளை செய்யவிடாமல் தடுத்து, அவற்றை அலைய விட்டமைதான் காரணம் என்பதை பிரதமர் ரணில் புரிந்துகொள்ளக் கூடிய நல்ல ஆங்கிலச் சொல்லாடல்களில் அடுக்கி இருந்தார் சிவஞானம்.

"இந்துக்கள் மற்றும் பௌத்தர்கள் என்ற வகையில் வன்முறையால் கொல்லப்பட்ட ஆன்மாக்களின் சாபம் பற்றி நாம் அறிவோம். இந்த நாட்டை இந்த ஆன்மாக்களின் சாபம் சுற்றி அலைந்து அச்சுறுத்தலை ஏற்படுத்தி வருவது தெளிவானது. கர்மவினையின் தாக்கங்களே இந்த நாட்டை தாக்குகின்றன என்பதும் தெளிவு.

இந்த ஆன்மாக்களை நினைவு கூர்ந்து பிரார்த்தனை செய்வதால் அவை அமைதி பெறுகின்றன என்பது எமது சமய நம்பிக்கையாகும்.

இறுதியாகப் படுகொலை இடம்பெற்ற முள்ளிவாய்க்காலில் மேற்குறிப்பிட்டவாறு மரணித்த ஆன்மாக்களுக்கு அமைதியான முறையில் 18.05.2022 ஆம் திகதி அஞ்சலி மற்றும் பிரார்த்தனை செய்ய தமிழ் மக்கள் மிகவும் தீர்மானமாக உள்ளனர்."

– இப்படித் தெட்டத்தெளிவாக குறிப்பிட்டிருக்கின்றார் சி.வீ.கே.சிவஞானம்.

உண்மையான பௌத்தனின் நெற்றிப் பொட்டில் அடித்த மாதிரி இந்த விடயம் உணரப்பட்டு இருக்கும் என்பது நிச்சயம்.

நாடுபடும் அல்லோலகல்லோல நிலைமைக்கு ஆத்மாக்களை சாந்தப்படுத்த விடாமல், அலையச் செய்திருக்கின்றமைக்கு இந்தக் கெடுபிடிப் போக்குத்தான் காரணம் என்று சி.வீ.கே.சிவஞானம் ஊடாக, அவர் கும்பிடும் நல்லூர் கந்தன்தான் ரணிலுக்கு உரைக்க – உறைக்க – வைத்தானோ என்னவோ...!

இந்த நினைவேந்தல் உரிமையின் பின்னால் இருந்த சமூக நியாயங்களை – தார்மீக நீதியை – புரிந்து ஏற்றுக் கொள்ள மறுத்த பௌத்த, சிங்களத்திற்கு அதன் வழியிலேயே விடயங்களை புரிய வைத்த சிவஞானம் பாராட்டுக்குரியவர்தான். அதை வெளிப்படையாகச் சொல்வதில் தப்பில்லை. He deserves it. அதனால் சொல்லுகிறேன். அவரது அனுபவமும், பக்தியும், ஆங்கில மொழி வாண்மையும் சரியாகத் தமிழினத்துக்கு சமய சந்தர்ப்பத்தில் பயன்பட்டிருக்கின்றன. நன்றியும் வணக்கமும் அவரை வழிபடுத்தும் நல்லூர் முருகனுக்கு...!

★ ★ ★

மஹிந்த ராஜபக்ஷ திருகோணமலையில் இருந்து கொழும்புக்கு மீண்டு விட்டார். தரை வழியாகவே பயணித்து வந்தார். பயணக் களைப்பு, சுகவீனம் காரணமாக நேற்று நாடாளுமன்றத்திற்கு அவர் வரவில்லை என்று கூறப்பட்டது. தந்தையைக் கூடவிருந்து கவனித்தமையால் மகன் நாமல் ராஜபக்ஷ எம்.பியும் நேற்று நாடாளுமன்றத்திற்கு சமுகம் தரஇயலவில்லை.

நேற்று பிரதி சபாநாயகர் தெரிவில் தோல்வியுற்ற ரோஹிணிகுமாரி கவிரத்ன நேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போது ஒரு தகவலை வெளியிட்டார்.

நேற்றைய நாடாளுமன்ற நடவடிக்கைகளைப் பார்க்கும்போது ஆளும் பொதுஜன பெரமுன இன்னமும் கறுப்புப் பறவையின் கட்டுப்பாட்டில்தான் இயங்குகின்றது என்பது தெளிவு. அதனால் அந்த கட்சியோ அதனைக் கொண்டிருக்கும் அரசோ இனிமேலும் உருப்படாது என்பது உறுதி என்றார் அவர்.

கறுப்புப் பறவை என்றால் காகம் என்பதும், காகம் என்பது எந்த ராஜபக்ஷவை குறிக்கும் என்பதும் நமது வாசகர்களுக்கு தெரிந்ததுதானே...!

– மின்னல் –

## ஜனாதிபதிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

ஜனாதிபதிக்கு எதிரான அதிருப்திப் பிரேரணையை நேற்றே விவாதத்துக்கு எடுப்பது என்பதை முடிவு செய்வதற்கான வாக்கெடுப்பு நேற்று நாடாளுமன்றத்தில் தோற்கடிக்கப்பட்டமையை அடுத்து பிரதமர் இவ்வாறு தனது ருவிட்டர் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

"இது ஜனாதிபதிக்கு எதிரான அதிருப்திப் பிரேரணை மீதான வாக்கெடுப்பு அல்ல. இது அனைத்து நாடாளுமன்ற நடவடிக்கைகளையும் இடைநிறுத்துவதற்கும், அதிருப்திப் பிரேரணையை உடனடியாக விவாதிப்பதா என்பதை முடிவு செய்வதற்குமான வாக்கெடுப்பாகும்.

தமது வீடுகள் மீதான தாக்குதல்கள் தொடர்பில் விவாதம் நடத்த விரும்பும் ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதிருப்திப் பிரேரணையை உடனடியாக விவாதத்திற்கு எடுத்துக் கொள்வதற்கு ஆதரவாக வாக்களிக்க மாட்டார்கள். எனவே இது தோல்வியடையும் என நான் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனுக்கு 16 ஆம் திகதியே அறிவுரை கூறியிருந்தேன்.

தாக்குதல்கள் தொடர்பான விவாதத்தை இன்றே நடத்துவதற்கு அனுமதித்திருந்தால் நன்றாக இருந்திருக்கும்,

இன்னும் சில நாள்களில் இந்த அரசாங்க நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கே அடையாள அதிருப்திப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்க வேண்டிய கட்டாயம் ஏற்படும்.

இப்போது ஜனாதிபதிக்கு ஆதரவான நாடாளுமன்ற உறுப்பினர்கள், இந்த வாக்கெடுப்பின் தோல்வியை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்தி அதிருப்திப் பிரேரணையை பிந்தைய திகதியில் எடுத்துக் கொள்வதைத் தடுக்கிறார்கள்.

எதிர்க்கட்சிகள் சிறந்த மூலோபாய அணுகுமுறையை முற்போக்காகப் பயன்படுத்தினால் நல்லது. எனினும் கடந்தவாரம் தெரிவித்தபடி பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிப்பதற்கான எங்களின் உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்த விரும்புகிறோம். – என பிரதமர் தனது ருவிட்டரில் பதிவேற்றியுள்ளார்.

இவ்விடயத்தில் பிரதமர் குத்துக்கரணம் அடித்து விட்டார் என்ற சாரப்பட நாடாளுமன்றத்தில் சுமந்திரன் எம்.பி. நேற்றுக் காட்டமாகக் குற்றஞ்சாட்டியிருந்தார். அதற்கு பதிலளிக்குமாற் போல இந்த ருவிட்டர் பதிவை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேற்கொண்டிருக்கின்றார்.

# அரியாலை கடல் அட்டைப் பண்ணையின் உரிமையாளரான சீனரே விபத்தில் மரணம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், மே.18



புத்தளம் பகுதியில் நேற்று முன்தினம் இடம் பெற்ற வீதி விபத்தில் உயிரிழந்த சீன நாட்டவர் அரியாலை கடல் அட்டைப் பண்ணையை நடத்துபவர் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

கொழும்பில் இருந்து யாழ் திரும்பிக்கொண்டிருந்த கார் புத்தளம் பகுதியில் விபத்திற்குள்ளானது. இதன்போது சீன நாட்டவர் ஒருவர் உயிரிழந்திருந்தார்.

உயிரிழந்தவர் யாழ்ப்பாணம் அரியாலையில் கடல் அட்டைக் குஞ்சுப் பண்ணை நடத்துபவர் என தற்போது கண்டறியப்பட்டுள்ளது.

சீன நாட்டவர் பயணித்த வாகனம் மன்னார் மாவட்டம் முசலிப் பகுதியைச் சேர்ந்த – கடல் அட்டை ஏற்றுமதி செய்யும் – ஒருவருக்குச் சொந்தமானது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணம் அரியாலையில் பண்ணை நடத்துபவர் பூநகரி கௌதாரிமுனையில் கடல் அட்டைப் பண்ணை ஆரம்பித்த போது பெரும் சர்ச்சை ஏற்பட்டு அந்தப் பண்ணை தற்போது அகற்றப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## முள்ளிவாய்க்கால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

ஆண்டு வள்ளிபுனம் பகுதியில் விமானக் குண்டுவீச்சில் பலியாகிய மாணவர்களுக்கான அஞ்சலி செலுத்தியதை தொடர்ந்து புதுக்குடியிருப்பு நகர் பகுதியை வந்து பேரணி நிறைவடைந்துள்ளது.

இந்த நடைபவனி இன்று காலை 8 மணிக்கு புதுக்குடியிருப்பில் இருந்து ஆரம்பமாகி, காலை 10.30க்கு முள்ளிவாய்க்காலில் இடம்பெறவுள்ள நினைவேந்தல் நிகழ்வில் கலந்து கொள்ளக் கூடியதாக அங்கு சென்றடையும்.

இன்று முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வில் கலந்துகொள்ள வருகை தருகின்றவர்கள் காலை 8 மணிக்கு புதுக்குடியிருப்பு சந்தியிலே வருகைதந்து அந்தப் பேரணியில் இணைந்து கொள்ளுமாறும் ஏற்பாடாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

இதேவேளை முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக் கட்டமைப்பின் இணைத்தலைவர்களில் ஒருவரான லியோ அடிகளார் இன்றைய நினைவேந்தல் நிகழ்விற்கான அனைத்து ஏற்பாடுகளும் நிறைவடைந்து உள்ளன எனவும், அனைத்து உறவுகளையும் நினைவேந்தல் நிகழ்வில் கலந்துகொள்ளுமாறும் அழைப்பு விடுத்துள்ளார்.

## பாதிக்கப்பட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

அவர்களுக்கு விரைவாக புதிய வீடொன்றை வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

தலவத்துகொட பகுதியில் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான இடத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்காக 100 வீடுகள் நிர்மாணிக்கப்படுகின்றன எனக் கூறப்படுகிறது.

அவற்றை விரைவில் நிறைவு செய்து பாதிக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## புதிய எம்.பி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் மீது தாக்குதல் மேற்கொண்டமையை அடுத்து ஏற்பட்ட கலவரங்களின்போது நாடாளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துக்கோரள மற்றும் அவரது மெய்ப்பாதுகாவலர் ஆகியோர் உயிரிழந்திருந்தனர்.

அந்த மாவட்டத்தில் பொதுஜன பெரமுனவின் பட்டியலில் விருப்பு வாக்குகளில் அடுத்த நிலையில் இருக்கின்றன – ஐந்தாம் இடத்தைப் பெற்றிருந்த – ஜகத் சமரவிக்கிரம இப்போது எம்.பியாகப் பதவியேற்கின்றார்.

## ஏழு எம்.பிக்களிடம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

நேற்று முன்தினம் பணிப்புரை விடுக்கப்பட்டிருந்தது.

இதற்கமைய அந்த ஏழு நாடாளுமன்ற உறுப்பினர்களிடமும் கட்டாயமாக வாக்குமூலம் பதிவு செய்யப்பட வேண்டியுள்ளதாக சபாநாயகருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.



காலைக்கதிர் Kalaikkathir

# சட்டவிரோத மாணிக்கக்கல் அகழ்வு நோர்வூட் பகுதியில் நால்வர் கைது

நோர்வூட் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் சட்டவிரோதமான முறையில் மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனக் ஹற்றன் கோட்ட விசேட குற்றத் தடுப்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நோர்வூட் போட்ரி தோட்டத்தில் இடம் பெற்ற இக்கைது சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலும் தெரிவிக்கையில் –

விசேட குற்றத்தடுப்பு பிரிவுக்குக் கிடைத்த இரகசிய தகவலினையடுத்து விசேட குற்றத்தடுப்பு பிரிவின் பொறுப்பதி காரியின் வழிகாட்டலில் பொலிஸ் பரிசோதகர் டி.என்.ஏ.தசநாயக்கவின் தலைமையில் பொலிஸ் குழுவினர் மேற் கொண்ட சுற்றிவளைப்பின் போதே மேற்படி நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த நபர்கள் காசல்ரீ நீர்த்தேக்கத்திற்கு நீர் வழங்கும் கெசல்கமு ஓயாவின் கிளை ஓடை ஒன்றில் பாரிய சூழல் சீர்கேடு ஏற்படும் வகையில் மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்டிருந்துள்ளனர்.

அப்பிரதேசத்தில் நீண்ட காலமாக மிகவும் ரகசியமான முறையில் இவ்வாறு சட்டவிரோத மாணிக்கக்கல் அகழ்வில் இவர்கள் ஈடுபட்டிருந்தமை விசாரணையின் போது தெரியவந்துள்ளது.

அத்துடன் கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து மாணிக்கக்கல் அகழ்விற்காகப் பயன்படுத்தப்பட்ட உபகரணங்கள் சிலவும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட நால்வருடன், கைப்பற்றப்பட்ட உபகரணங்கள் நோர்வூட் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

அத்துடன் கைதானவர்கள் பொலிஸ் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளதுடன், எதிர்வரும் 23ம் திகதி ஹட்டன் நீதவான் முன்னிலையில் முன்னிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் கைது செய்யப்பட்டவர்கள் நோர்வூட் பொகவந்தலாவை பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என தெரியவந்துள்ளது.

# தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தால் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கல்



(கலையமுதன்)

தமிழ் தேசிய பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் கந்தர்மடம் பகுதியில் அமைந்துள்ள தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் அலுவலகத்துக்கு முன்பாக நேற்று காலை 9 மணியளவில் இந் நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது அந்த அமைப்பின் தலைவர் பொ.ஐங்கரநேசன் மற்றும் சக உறுப்பினர்களால் முள்ளிவாய்க்காலில் உயிர்நீத்தவர்களுக்கு ஈகைச்சுடர் ஏற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

அத்துடன் தயாரிக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் கஞ்சி வீதியால் பயணித்த பொது மக்களுக்கு விநியோகிக்கப்பட்டது.

# உள்நாட்டுத் துப்பாக்கிகளுடன் இருவர் முல்லைத்தீவில் கைது!

முல்லைத்தீவின் இருவேறு பகுதிகளில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கிகளுடன் சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளார்கள். திங்கட்கிழமை இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

வெலிஓயா பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைவாக மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட கைத் துப்பாக்கியுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் 46 வயதுடைய வெலிஓயா பிரதேசத்தைச் சேர்ந்தவராவார். சம்பவம் தொடர்பில் வெலிஓயா பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைவாக மூங்கிலாறு பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் 36 வயதுடைய புதுக்குடியிருப்பு பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்றும் புதுக்குடியிருப்பு பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# பிரிவினை காட்டாது அனைவருக்கும் பிரதமர் ரணில் சிறந்த சேவை புரிவார்!

## விஜயகலா நம்பிக்கை

ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களித்த வாக்களிக்காத மக்கள் என்ற பிரிவினை காட்டாது அனைவருக்கும் நாட்டின் பிரதமராக பதவியேற்றுள்ள ரணில் விக்கிரமசிங்க சிறந்த சேவை புரிவார் என முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சரும் யாழ்.மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளருமான விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் புதிதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பிரதமராக பதவி ஏற்றமை தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்

கடந்த நாடாளுமன்ற தேர்தலின் போது நாடுபூராகவும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களித்த வாக்களிக்காத மூவின மக்களுக்கும் தற்போது நாட்டின் பிரதமராக ரணில் விக்கிரமசிங்க பதவியினை ஏற்றுள்ளார் கிடைக்கப்பெற்றுள்ள பிரதமர் பதவியின் மூலம் வாக்களித்த மக்கள் வாக்களிக்காத மக்கள் என்ற பிரிவினை காட்டாது அனைத்து மக்களுக்கும் அதாவது மூவின மக்களுக்கும் இன மத பேதமின்றி அனைவருக்கும் சமமாக நாட்டுக்கு சேவையை புரிவார் எனவும் பொது மக்கள் இது தொடர்பில் அச்சம் கொள்ளத் தேவையில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

# பிக்குவின் கோரிக்கைக்காகவே ஆரியகுளம் புனமைக்கப்பட்டது!

(ந.லோகதயாளன், கலையமுதன்)

நாகவிகாரை பிக்குவின் கோரிக்கைக் கமையவும் விகாரைக்கு வந்துபோகிறவர்களின் பொழுது போக்கு வசதிக்காகவுமே ஆரியகுளம் புனரமைக்கப்பட்டது. அதனால் அதன் தேவைகளை நிறைவேற்றவே வட மாகாண ஆளுநர் கேட்கிறார். என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

கொக்குவிலில் உள்ள தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் நடந்த ஊடக சந்திப்பின் போது, ஆரிய குளத்தில் வெசாக் கூடுகளை கட்ட அனுமதிக்காவிட்டால் யாழ்.மாநகர சபையை கலைக்க நேரிடும் என வடமாகாண ஆளுநர் எச்சரிக்கை விடுத்தார் என வெளியான செய்தி தொடர்பில் ஊடகவியலாளர் கேள்வியெழுப்பியபோதே கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில் –

வடமாகாண ஆளுநரின் கருத்தை நாம் கண்டிக்கின்றோம். அது மிகப் பிழையான கருத்து. யதார்த்தம் என்னவென்றால் இனவெறி கொண்ட ஜனாதிபதி தயவில் இருக்கின்ற ஒருவரின் கருத்துக்கு முண்டு கொடுக்கும் வகையில் தமிழ்த் தேசியம் பேசிக்கொண்டு சிங்கள தேசிய வாதத்துக்கு முண்டு கொடுத்து அவர்கள் நல்ல பிள்ளைக்கு நடிக்க வெளிக்கிட்டு மாட்டுப்பட்டு கொண்டிருக்கிறார்கள். இதனை மக்கள் விளங்கிக் கொள்ள வேண்டும்.

யாழ்ப்பாண கலாசார நிலையத்துக்கு அருகில் இருக்கின்ற குளத்தைப் புனரமைத்து இருக்க முடியும். அது தமிழ் மக்கள் நடமாடக் கூடிய ஒரு மிக முக்கியமான பகுதியில் உள்ள குளம். அதை செய்யாமல் விட்டுவிட்டு இராணுவத்தினரின் முழு ஒத்துழைப்புடன் செயற்படும் ஒருவரின் நிதியுதவியுடன் ஆரியகுளம் புனரமைக்கப்பட்டது.

நாகவிகாரை பிக்குவின் கோரிக்கைக் கமையவே ஆரியகுளம் புனரமைக்கப்பட்டது. நாக விகாரைக்கு வந்துபோகிறவர்களின் பொழுது போக்கு வசதிக்காகவே அது புனரமைக்கப்பட்டது. அதனை நிறைவேற்றவே ஆளுநர் கேட்கிறார்.

இதனை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். இதனை திருத்தியதால் எமக்கு என்ன பயன்? – என்றார்.

### பிரதமரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடாளுமன்றத்தில் ஜனாதிபதிக்கு எதிரான அதிருப்தியை வெளிப்படுத்தும் பிரேரணையை நேற்றே – முற்கூட்டியே – விவாதிப்பதற்கு ஏற்ற வகையில் நாடாளுமன்ற நிலையியல் கட்டளைகளை இடைநிறுத்தக்கோரும் பிரேரணை மீது வாக்கெடுப்பு நடத்தப்பட்டது, அரசுத் தரப்புடன் சேர்ந்து அதற்கு எதிராக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வாக்களித்திருந்தார். அதனால் ஜனாதிபதிக்கு எதிரான அதிருப்திப் பிரேரணையை நேற்று விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள முடியாமல் போய்விட்டது.

நேற்றைய நாடாளுமன்ற சபையில் உரையாற்றிய சுமந்திரன் –

ஜனாதிபதிகோட்டாபயராஜபக்ஷவைப் பாதுகாக்க முயற்சிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் யார் என்பதை நாடு இப்போது அறிந்திருக்கும்.

நம்பிக்கையில்லா பிரேரணையை விவாதத்திற்கு கொண்டு வருவதன் மூலம் ஜனாதிபதி தனது பதவியை இழக்கப்போவதில்லை.

ஆனால் உங்கள் பெயர்கள், நீங்கள் இந்தப் பிரேரணை மீது வாக்களித்த முறையின் அடிப்படையில் இன்று பல கையில் காட்சிப்படுத்தப்பட்டன. ஜனாதிபதியை யார் பாதுகாக்கிறார்கள் என்பது இப்போது நாட்டிற்குத் தெரியும். பிரதமர் மற்றும் அரசாங்கத்தின் கதிரைகளில் அமர்ந்திருப்பவர்களின் வெட்கக்கேடான நடத்தை இது.

ஜனாதிபதிக்கு எதிரான பிரேரணை வரைவு செய்யப்பட்ட போது எதிர்க்கட்சியில் அமர்ந்திருந்த ரணில் விக்கிரமசிங்கவும் அதற்கு இணக்கம் தெரிவித்தார்.

ரணில் அந்தப் பிரேரணையை பார்க்க வேண்டும் என்று விரும்பினார். நான் அதை அவருக்கு ஏப்ரல் 26 ஆம் திகதி அனுப்பினேன். அவர் அதை ஆய்வு செய்தார். அந்தப் பிரேரணையை காலி முகத்திடலுக்கு அனுப்புமாறு அவர் பரிந்துரைத்தார்.

காலி முகத்திடலில் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு இந்த வரைவு அனுப்பப்பட்டு அவர்களின் சம்மதமும் பெறப்பட்டது. ஜனாதிபதி மீது அதிருப்தியை வெளிப்படுத்தும் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிப்பதாக பிரதமர் இரண்டு அறிக்கைகளை வெளியிட்டிருந்தார்.

ரணில் விக்கிரமசிங்க தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டமை ஏன்? பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்கத் தவறியமை ஏன்?

அன்றைக்கும் இன்றைக்கும் ஒன்று தான் மாறியுள்ளது. இப்போது அவருக்கு ஒரு வேலை கிடைத்துள்ளது. அன்று எதிர்க்கட்சியில் இருந்தார். இன்று பிரதமராக இருக்கிறார்.

பிரதமர் பதவிக்காக ரணில் விக்கிரமசிங்க இந்த நாட்டுக்குப் பகிரங்கமாகத் தாம் கூறிய கொள்கைகளை அவர் வியாபாரம் செய்துள்ளார்.

அவர் நமது நாட்டு பிரதமர். உட்காருகிறாரா, நிற்கிறாரா, நடப்பாரா என்று தெரியாத ஒருவரை பிரதமராகப் பெற்றிருக்கின்றமை நமக்கு வெட்கமாக இருக்கிறது.

அவருக்கே அவரது கொள்கைகள் என்னவென்று தெரியவில்லை. அவர் சொல்வது ஒன்று, செய்வது வேறு. ஆளும் கட்சியிலேயே ஆதரவு இல்லாத போது எதிர்க்கட்சிகளிடம் ஆதரவை கேட்கும் பிரதமர் இவர்தான். – எனக் குறிப்பிட்டார்,

### யாழில் மோ.சைக்கிள்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆலய வீதியில் எதிர் எதிர்த் திசையில் வந்த மோட்டார் சைக்கிள்களே நேருக்கு நேர் மோதிய சமயம் தீ பற்றிக்கொண்டன. தீ சுவாலை விட்டு எரிந்தமையினால் தீயணைப்பு சேவையின் உதவியும் பெறப்பட்டது.

நேற்று இரவு 10.30 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் அகப்பட்டவர்கள் யார் என்பது தொடர்பில் உடனடியாக அடையாளம் காணப்படவில்லை.

இதில் படுகாயமடைந்தவர்கள் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். உயிரிழந்தவர்களின் உடல்களை கோப்பாய் பொலிஸார் மீட்டு போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

### 2 எம்.பிக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் படுத்துமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு சட்டமா அதிபர் நேற்று முன்தினம் உத்தரவிட்டிருந்தார்.

இதனைத் தொடர்ந்தே இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் இந்தத் தாக்குதலுடன் தொடர்புடைய ஏனைய சந்தேக நபர்களும் விரைவில் கைது செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.


**வீடு வாடகைக்கு தேவை**

யாழ்ப்பாணத்தை மையமாக கொண்டு இயங்கும் தொண்டு நிறுவனம் ஒன்றிற்கு அலுவலக தேவைகளுக்காக யாழ் நகர் அல்லது நல்லூர் பகுதியில் அமைதியான சூழலில் வீடு ஒன்று வாடகைக்கு தேவை.

தொடர்புக்கு – 0779191529


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 076 306 8091
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## நீடிக்கும் வரலாற்று அநீதி

தமிழர் தேசத்தின் – தமிழினத்தின் – ஆன்மாவையே சுட்டெரித்து நிற்கும் ஒரு கொடூரத்தின் பதின்மூன்றாவது ஆண்டு நிறைவில் நாம் நிற்கின்றோம்.

ஒரு தேசத்தின் பேரழிவுக்கு – பல்லாயிரம் மக்களின் படுகொலைகளுக்கு – மேலும் பல்லாயிரம் மக்களின் அவய இழப்புகள் உட்பட்ட படுகாயங்களுக்கு – பல்லாயிரம் கோடி ரூபா சொத்திழப்புகளுக்கு – ஓரினத்தின் ஒரு தலைமுறை அழிவுக்கு – காரணமான பேரினவாதக் கொடூரங்களுக்கு நீதி, நியாயம், பொறுப்புக் கூறல் இடம்பெறாமல் பதின்மூன்று வருடங்கள் கடந்து போகின்றமையை வேதனையோடு பார்த்திருக்கும் வரலாற்றுத் துன்பியல் வேளை இது.

பௌத்த, சிங்களப் பேரினவாதம் தமிழ் மக்கள் திரள்வு மீதான வன்கொடுமையை (Mass Atrocities) சர்வ சாதாரணமாக இழைத்து விட்டு, எந்த எதிர்வினையையோ, தண்டனையோ எதிர்கொள்ளாமல், சுதந்திரமாகப் போவதற்கு அனுமதித்திருக்கும் சர்வதேச அநீதிப் பொறிமுறைக்குள் தமிழர் தேசம் சிக்கிக் கிடக்கின்றது என்று வேதனைப்படுவதைத் தவிர எமக்கு வழியில்லை; வேறு நாதியில்லை.

ஐ.நா. அறிக்கைகளின்படி 2009 இறுதி யுத்தத்தின் இறுதி நான்கு மாத காலத்தில் நாற்பதாயிரத்துக்கும் குறையாத பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் முன்னால் அப்போதைய மன்னார் ஆயர் சமர்ப்பித்த புள்ளிவிவரங்களின்படி ஒரு லட்சத்து 46 ஆயிரம் பேர் காணாமல் போயுள்ளனர்.

தமிழர் தேசம் மீது பௌத்த, சிங்களப் பேரினவாத அரசு கட்டவிழ்த்து விட்டது இனப்படுகொலை என்றே சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகள் விவரிக்கின்றன.

நடைபெற்றவை இனச் சுத்திகரிப்பு, யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள், மக்கள் கூட்டத்தின் மீதான வன்கொடூரங்கள், மனித உரிமை மீறல்கள் என்றெல்லாம் சொல்லடுக்குகளில் குற்றச்சாட்டுகளை வகைப்படுத்தும் சர்வதேச அமைப்புகளும், ஐ.நாவும், உலக நாடுகளும் இவை எவை தொடர்பிலும் தமிழருக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்கவுமில்லை, அதற்கான சாத்தியமான நடவடிக்கைகளை முன்னெடுக்கவுமில்லை என்பதுதான் உண்மை.

இந்த வன்கொடூரங்கள் தொடர்பில் சர்வதேச நீதி விசாரணை நியமங்களுக்கு அமைவாக சட்ட விசாரணைகள் நடைபெறவேண்டும், உண்மைகள் கண்டறியப்பட வேண்டும், குற்றமிழைத்தோர் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும், பாதிப்புற்றோருக்கு மேலும் காலதாமதமின்றி இழப்பீடுகள் வழங்கப்பட வேண்டும், மீள நிகழாமை உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்றெல்லாம் அலங்கார அறிவிப்புகள் விடுக்கப்படுகின்றன. ஐ.நா. மட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்படுகின்றன.

தமிழர்களுக்கு எதிராக இறுதிக்கட்ட யுத்தத்தில் இழைக்கப்பட்ட கொடூரங்கள் ஐ.நாவினால் விசாரிக்கப்பட்டு விட்டன, இனி, குற்றமிழைத்தோரைச் சட்டத்தின் முன் நிறுத்தித் தண்டிப்பதுதான் பாக்கி என்றளவில் கூட கருத்துகள் முன்வைக்கப்பட்டன.

ஆனால், மனிதப் பேரவலத்தைச் சந்தித்த தமிழர் தேசத்துக்கு கிஞ்சித்தும் நீதி செய்யப்படவில்லை. சர்வதேச சமூகம் அதில் தொடர்ந்தும் தவறிழைத்து, அநீதியாகவே நடந்து கொண்டிருக்கின்றது என்ற வரலாற்றுக் குற்றத்துடன்தான் இவ்வாண்டும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பேரவலச் சிந்தனையோடு நம்மைக் கடந்து செல்கின்றது.

# ஐந்து தடவை பிரதமராக இருந்த ரணில் ஏன் பொருளாதாரத்தை வளர்க்கவில்லை!

### வடமாகாண முன்னாள் விவசாய அமைச்சர் சிவனேசன் கேள்வி




ஐந்து முறை பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க ஏன் இந்த நாட்டின் பொருளாதாரத்தில் சிறிதளவேனும் தாக்கத்தை ஏற்படுத்தவில்லை எனவும் பொருளாதாரம் சீரழிந்த பின்னர்தான் அதனை செய்யமுடியும் என்பது வேடிக்கையான விடயமாக உள்ளது என முன்னாள் வடமாகாண விவசாய அமைச்சர் க.சிவனேசன் தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசியல் நிலைமைகள் தொடர்பில் முல்லைத்தீவு ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பொருளாதார பிரச்சினை நீண்டகாலமாக மாறி மாறிவருகின்ற பேரினவாத அரசுகளும் திட்டமிடப்படாத பொருளாதாரத்தை மேற்கொண்டு வந்திருக்கின்றார்கள். ஜே.ஆர்.ஜெயவர்த்தனா ஆட்சிக்கு வந்த பின்னர் திறந்த பொருளாதாரத்தைக் கொண்டுவருவதாக சொல்லி ஆரம்பித்ததில் இருந்து ஒருவிடயம் விளங்கவில்லை இங்குள்ள மூன்று மொழிகளையும் பேசுகின்ற மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்பது.

மாறாக ஒரு சிறுபான்மையினரை போருக்கு அழைத்ததன் ஊடாக அவரின் திட்டம் தோல்வியில் அடைந்தது என்பது நாங்கள் அறிந்த விடயம். கடந்த காலங்களில் யுத்தத்தை நோக்கிய கண்ணோட்டத்துடனான அரசுகள் மாறிமாறி வந்தனவே தவிர நாட்டின் பொருளாதாரத்தையோ, சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதிலோ யாரும் காத்திரமான முடிவை எடுக்கவில்லை.

வாக்குறுதிகளைக் கொடுத்து தேர்தலுக்கு வருவதும் அதன் பின்னர் பேரினவாத சக்திகளின் கைக்கூலிகளாக செயற்படுவதும் தான் மாறி மாறி நடைபெற்று வந்துள்ளது. சிறந்த பொருளாதார திட்டம் எந்த அரசிடமும் இல்லை கடனை பெற்று கடனில் ஊழல் மூலம் இங்குள்ள அரசியல் வாதிகள் முதலீடாகக் கொண்டார்கள்.

ஈஸ்டர் குண்டுத்தாக்குதலும் ஆட்சிக்கு வருவதற்கு திட்டமிடப்பட்ட செயலா என்று பலரிடம் சந்தேகம் இருக்கின்றது.

உரத்தினை நிறுத்தியமை ஆரம்பத்திலேயே தெரிந்துள்ளது. டொலர் பிரச்சினை மிகப்பெரும் சூழ்நிலையை ஏற்படுத்தப் போகிறது என்று பகல் கனவைக் கண்டுதான் செய்தார்கள்.

இலங்கை தீவு மிகவும் வளம் பொருந்திய நாடு. நாங்கள் யாரிடமும் கையேந்த வேண்டிய நிலை இல்லை. எங்களை விடக் குறைந்த வளங்களை கொண்ட நாடுகள் எல்லாம் பணக்கார நாடுகளாக இருக்கின்றன. வளங்கள் அனைத்தும் இங்கு இருக்கின்றது. நாங்கள் வளம் குறைந்தவர்களிடம் கையேந்தும் நிலைக்குச் சென்றது இந்த பேரினவாத அரசியல்வாதிகளால்தான்.

இன்று சிங்கள இளைஞர்களின் போராட்டம் என்பது காலத்தின் தேவை அவர்கள் கூறுவது அரசியல் மாற்றம் அல்ல. இப்போது உள்ள நடைமுறை முற்றுமுழுதாக மாற்றப்பட வேண்டும் அரசியல் சாசனம் மாற்றி அமைக்கப்பட வேண்டும் என்பது தான். அவர்களின் கோரிக்கையாக இருக்கின்றது.

எங்களுடைய தமிழ் தரப்பில் இருக்கின்ற தேசிய அரசியல்வாதிகள் எனத் தங்களைக் கூறிக்கொள்கின்றவர்கள் நாட்டில் இந்த நிலைமை நீடிக்குமாக இருந்தால் ஒருநாள் கோட்டா கோ கோம் என்று சொல்கின்ற அரசியல்வாதி மறுநாள் ரணில் கம் கோம் என்கின்ற சூழ்நிலையை ஏற்றுக்கொள்கின்ற ஒரு நாளில்பல்ட்டிஅடிக்கின்றநிலைஇருக்கின்றது.

தமிழ் மக்களின் தேவை என்ன?, பிரச்சினைகள் என்ன என்பது தொடர்பான போராட்டத்தின் தன்மையைப் புரிந்துகொள்ளவில்லை என்று நான் நினைக்கின்றேன். அவர்களும் இந்த மேட்டுக்குடி சிங்களவர்களுடன் சேர்ந்து இந்த போராட்டத்தினை காட்டிக்கொடுத்துவிடுவார்களோ என்ற அச்சம் எழுந்துள்ளது.

இதில் நாங்கள் தவறு செய்வோமாக இருந்தால் இளைஞர்களால் எடுக்கப்பட்ட இந்த போராட்டங்கள் காட்டிக்கொடுக்கப்பட்டு ஒடுக்கப்படுமாக இருந்தால் அதற்கு இங்கே இருக்கின்ற தமிழ் தலைவர்கள் துணை போவார்களாக இருந்தால் வரலாற்றிலே மிகப்பெரிய ஒரு பழியினை தமிழ்மக்கள் மீதும் இந்த தலைவர்கள் மீதும் கொண்டு வரும் என்பதில் அவதானமாக இருக்க வேண்டும்.

இனியும் இவ்வாறான தலைமைகளை நாங்கள் பின்பற்றுவதா என்பது இளைஞர் மட்டத்தில் சிந்திக்க வேண்டிய விடயம். சிங்கள இளைஞர்கள் மத்தியில் சிறந்த நாட்டினை உருவாக்க வேண்டும் என்ற எண்ணக் கரு அவர்கள் மத்தியில் தோன்றியுள்ளதோ அதேபோன்று எங்கள் இளைஞர்கள் மத்தியிலும் இதற்கான சரியான முடிவை தேர்ந்தெடுக்க வேண்டிய காலகட்டம் இன்று இருக்கின்றது என்றுதான் நான் நினைக்கின்றேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# ராஜபக்ஷ அரசாங்கத்தை கொண்டுவருவதற்காக மீண்டும் விடுதலைப்புலிகளை உருவாக்குகிறார்கள்!

### தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் கருத்து

ராஜபக்ஷ அரசாங்கத்தை மீண்டும் கொண்டுவருவதற்கும், சிங்கள மக்கள் மத்தியில் ராஜபக்ஷவுக்கு உள்ள எதிர்ப்பை சமாளிப்பதற்காகவும் மீண்டும் விடுதலைப் புலிகள் உருவாகின்றார்கள் என்ற நிலையை ஏற்படுத்த முனைவதாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஷ் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வரும் முள்ளிவாய்க்கால் இனஅழிப்பு நினைவு வாரத்தின் ஐந்தாவது நாள் மட்டக்களப்பு புதுக்குடியிருப்பு பகுதியில் இடம்பெற்றது.


இந்நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஐ. நாவின் பொறுப்புக்கூறல் என்ற விடயத்திலிருந்து தப்பித்துக்கொள்வதற்காக புலிக்காய்ச்சல் ஏற்படுத்தப்படுவதாகவும் அவர் இதன்போது தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட புதுக்குடியிருப்பு பகுதியில் 1990ஆம் ஆண்டு காலப்பகுதியில் இராணுவத்தினரால் 17தமிழர்கள் படுகொலைசெய்யப்பட்ட நினைவுத்தூபி அருகே முள்ளிவாய்க்கால் இனஅழிப்பு நினைவு நாள் அனுஷ்டிக்கப்பட்டது.

இதன்போது நினைவுத்தூபியில் படுகொலை செய்யப்பட்டவர்களின் உறவினர்கள் உட்பட பொதுமக்கள் ஈகச்சுடரேற்றி அஞ்சலி செலுத்தியதை தொடர்ந்து முள்ளிவாய்க்கால் கஞ்சி மக்களுக்கு வழங்கிவைக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஷ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கோறளைப்பற்று பிரதேசசபை உறுப்பினர் கு.குணசேகரன் உட்பட பொதுமக்கள் பலரும் கலந்துகொண்டனர்.



# சொலமன் தீவுகளுடனான சீனாவின் பாதுகாப்பு ஒப்பந்தம் மேற்கத்திய நாடுகளின் முதுகெலும்பை நடுங்கச் செய்யும்

சொலமன் தீவுகள் **(Solomon Islands)** – மெலனீசியாவில் பப்புவா நியூ கினிக்குக் கிழக்கே கிட்டத்தட்ட ஆயிரம் தீவுகளைக் கொண்டுள்ள ஒரு தீவு நாடாகும். இத் தீவுகளின் மொத்த நிலப்பரப்பு 28,400 சதுர கி.மீ. (10,965 சதுர மைல்) ஆகும். இதன் தலைநகர் ஒனியாரா. குவாடல்கனால் தீவில் உள்ளது. சொலமன் தீவுகளுடன் சீனா கைச்சாத்திட்ட ஒப்பந்தம் அங்கு சீன இராணுவத்தை நிலைநிறுத்தும் வாய்ப்பை ஏற்படுத்தக் கூடும் என்று ஆஸ்திரேலியாவும் பிற கூட்டமைப்பு நாடுகளும் கவலை வெளியிட்டுள்ளன.
ஆஸ்திரேலியாவில் இருந்து சுமார் 2,000 கிலோமீற்றர் தொலைவில் இருக்கும் சொலமன் தீவுகள் மற்றும் சீனாவுக்கு இடையிலான பாதுகாப்பு உடன்படிக்கைக்கான திட்டங்களைக் காட்டும் ஆவணம் வெளிவந்துள்ளது. சொலமன் தீவுகளில் உள்ள சீனர்கள் மற்றும் அதன் பிரதான திட்டங்களை பாதுகாப்பதற்கு சீன படைகளை அங்கு நிலைநிறுத்த அனுமதிப்பதாக அந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.


சொலமன் தீவுகளுடனான சீனாவின் சமீபத்திய பாதுகாப்பு ஒப்பந்தம் மேற்கு நாடுகளை கவலையில் ஆழ்த்தியுள்ளது, அதே போல் அப்பகுதியில் அமெரிக்க ஆதிக்கத்திற்கு சவால் விடும் வகையில் பசுபிக் பகுதியில் இராணுவம் காலூன்ற வேண்டும் என்ற தனது லட்சியத்தை அவிழ்த்து விட்டது.

பெய்ஜிங் இந்த ஒப்பந்தத்தை இரண்டு இறையாண்மை மற்றும் சுதந்திர நாடுகளுக்கு இடையே இயல்பான பரிமாற்றம் மற்றும் ஒத்துழைப்பு என்று வடிவமைத்தது.

இருப்பினும், ஆஸ்திரேலியா, அமெரிக்கா, நியூசிலாந்து மற்றும் ஜப்பான் ஆகியவை பாதுகாப்பு கட்டமைப்பைப் பற்றிய கவலைகளைப் பகிர்ந்து கொண்டன. சுதந்திரமான மற்றும் திறந்த இந்தோ – பசுபிக்கிற்கான அதன் தீவிர ஆபத்துகளை வெளிப்படுத்தின – என்று ஹொங்கொங் போஸ்ட் தெரிவித்துள்ளது.

அமெரிக்கா, இந்தியா, ஜப்பான், ஆஸ்திரேலியா ஆகியவை இணைந்து குவாட் (Quadrilateral Security Dialogue - QUAD), AUKUS உருவாக்கம் மற்றும் முக்கியமாக, அமெரிக்காவும் இங்கிலாந்தும் ஆஸ்திரேலியா அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல்களைப் பெறுவதற்கு உதவ முடிவு செய்த பிறகு, சொலமன் தீவுகள் ஒப்பந்தத்தை சீனா தீவிரமாக எடுத்துக் கொண்டதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும், கடல்களைப் பகிர்ந்து கொள்ளும் பெரும்பாலான நாடுகளுடன் கம்யூனிஸ்ட் தேசத்திற்கு கடல் தகராறு உள்ளது. சீனா தனது வர்த்தக நலன்களைப் பாதுகாக்க கடல் வளங்களை விரிவுபடுத்துவது தீவிரமான தேவை. இதற்காக இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் உள்ள பல்வேறு நாடுகளுடன் பேச்சு நடத்தி வருகிறது – பசுபிக்நாடுகள், இந்தோனேஷியா, சிங்கப்பூர், கம்போடியா, தாய்லாந்து, மியன்மார், இலங்கை, சீஷெல்ஸ், பாகிஸ்தான், கென்யா, தான்சானியா, நமீபியா மற்றும் அங்கோலா உட்பட இந்தியப் பெருங்கடலில் கப்பல் போக்குவரத்தை கண்காணிக்கவும், பிற நாடுகளின் கடற்படைக் கடற்படைகள் மீது ஆளுமை செலுத்தவும் இந்த நாடுகளின் துறைமுகங்களில் காலூன்றித் தனது பிடியைப் பெறுவதற்கான திட்டங்களை சீனா மேற் கொண்டு வருவதாகக் கூறப்படுகிறது. இந்த துறை முகங்கள் 'ஸ்டிரிங் ஒவ் முத்துக்கள்' அல்லது சீனா கடல்சார் பட்டுப்பாதைத் தடங்கள் என்று அழைக்கப் படுகின்றன.



அறிக்கையின்படி, அமெரிக்கர்கள் 40 க்கும் மேற்பட்ட நாடுகளில் ஏராளமான இராணுவ தளங்களைப் பராமரிக்கின்றனர். மேலும் பிரெஞ்சு மற்றும் ஆங்கிலேயர்கள் ஆசியா, ஆபிரிக்கா மற்றும் ஐரோப்பாவில் வெளிநாட்டு புறப் பாதுகாப்பு மையங்களைக் கொண்டுள்ளனர். இதற்கு மாறாக, சீனாவின் ஒரே ஒரு கடற்படை தளம் உள்ளது – ஆபிரிக்காவின் கொம்புவில் உள்ள ஜிபூட்டியில்.

தென் சீனக் கடல் பிராந்தியத்தின் மீதான தனது சுய உரிமைக் கட்டுப்பாட்டிற்கு இது நேரடி அச்சுறுத்தலாக சீனா கவனிக்கிறது.

மேற்கத்திய நாடுகள் சீனாவுக்குச் சவால் விடுவதற்கு முன் நீண்ட தூரம் வர வேண்டும் என்பதை உணர்ந்து கொண்ட சீனா இறுதியில் சொலமன் தீவுகளில் தனது கடற்படை இருப்பை நிலைநிறுத்த திட்டமிடுகிறது.

சீன துருப்புக்களின் வரிசைப்படுத்தல் மற்றும் சீனக் கப்பல்களின் வருகைகள் – இது சீனாவிற்கு முக்கியமான கப்பல் வழித்தடங்களுக்கு அருகில் மட்டுமல்ல, அமெரிக்கா மற்றும் அதன் பசுபிக் நட்பு நாடுகளான ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்துக்கும் இடையே ஓர் இராணுவ இருப்பைக் கொடுக்கும் என்று ஹொங்கொங் போஸ்ட் தெரிவித்துள்ளது.

2017 ஆம் ஆண்டு முதல் ஹொனியாராவுடன் பாதுகாப்பு உடன்பாட்டைக் கொண்டுள்ள ஆஸ்திரேலியா, மேற்படி ஒப்பந்தத்தை மிகவும் கடுமையாக விமர்சித்துள்ளது. அமெரிக்கா மற்றும் நியூசிலாந்து உள்ளிட்ட பசுபிக்கில் உள்ள நாடுகளும் கவலை தெரிவித்துள்ளன.

செலமன் தீவுகளை இராணுவமயமாக்கும் திட்டம் குறித்து சீனா பலமுறை மறுத்த போதிலும், பாதுகாப்பு வல்லுநர்கள் பெய்ஜிங்கின் நோக்கங்கள் குறித்து தொடர்ந்து எச்சரிக்கையாகவே உள்ளனர். *

# இந்த மண் நிம்மதியான விடிவை காண்கின்ற நாளன்று தேசத்தின் தேசிய உணவாக கஞ்சி அங்கீகரிக்கப்படும்

## கரைச்சி பிரதேசசபை தவிசாளர் வேழமாலிகிதன் கருத்து






இந்த மண் நிம்மதியான விடிவை காண்கின்ற நாளன்று இந்த கஞ்சி தேசத்தின் தேசிய உணவாக அங்கீகரிக்கப்படும் என்பது நம்பிக்கை என கரைச்சி பிரதேச சபை தவிசாளர் அருணாசலம் வேழமாலிகிதன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி சேவைச்சந்தையில் வலிந்துகாணாமல்ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் முன்னெடுக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

2009 ஆம் ஆண்டு இந்த மண்ணிலே மேற்கொள்ளப்பட்ட இனப் படுகொலையின் உச்ச நாளாகிய மே 18 நினைவு நிகழ்வுகள் இடம்பெறுவதற்கு ஆயத்தமாகி வருகின்ற இந்தவேளை, எமது உயிரோடும் உள்ளத்தோடும் இணைந்துள்ள இந்த கஞ்சி வழங்கும் நிகழ்வு மிக முக்கியமானது.

இந்த கஞ்சியின் பின்னால் இருக்கக் கூடிய உணர்வுகளையும் வலிகளையும் இந்த இடத்தில் பேசுவது மிக முக்கியமானது. 2009 ஆம் ஆண்டு இதே காலப் பகுதியில் எங்களுடைய மக்கள் கொத்து கொத்தாக கொல்லப்பட்டமையை நாங்கள் நினைவுகூர்ந்து பார்க்கின்றோம்.

கையெது மெய்யெது என்று தெரியாத சதை குவியலுக்குள்ளே எங்களுடைய பிள்ளைகள் இருக்கின்றார்களா என்று ஒவ்வொரு பிணங்களாக பிரட்டிப் பார்த்ததை நாங்கள் நினைத்து பார்க்கின்றோம்.

போர் பாதுகாப்பு வலயங்கள் என சொல்லி அங்கு போகவிட்டு பல்குழல் ஏவுகணைகளாலே தாக்கி, எங்களுடைய உடல்களை சிதைத்து, வெறும் பக்கோ இயந்திரங்களால் வெட்டி புதைத்த காலங்களை நினைத்து பார்க்கின்றோம்.

இரசாயன குண்டுகளையும், கொத்து குண்டுகளையும் பாவித்து எங்களுடைய இனத்தை அழிப்பு செய்த நாள்களை நினைத்து பார்க்கின்றோம்.

அந்த காலக்கட்டத்தில் உணவின்றி கஞ்சி திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு அந்த இடத்திலே கஞ்சிக்காக எங்களுடைய பிள்ளைகள் நூற்றுக்கணக்கில் செல்களினாலே துவம்சம் செய்யப்பட்ட அந்த நாள்களை நினைத்துப் பார்க்கின்றோம்.

வெறும் தரப்பால் கொட்டில்களாக இருந்த அந்த இடங்களிலே ஒவ்வொரு நாளும் செத்து செத்து மலையாக குவிந்துகொண்டிருந்த பிணங்களினுடைய முகங்களை நாங்கள் நினைத்துப் பார்க்கின்றோம்.

எனது அப்பா , கணவன், பிள்ளைகள் என்று சொல்லி ஒவ்வொரு முகங்களையும் புதைத்துவிட்டு வெளியேறிய அந்த கணப்பொழுதுகளை நினைத்துப் பார்க்கின்ற அந்த பொழுதிலேதான் இந்த கஞ்சி எங்களோடு சேர்ந்திருக்கின்றது.

இந்த கஞ்சிக்குப் பின்னால் எங்களுடைய பசி இருந்திருக்கின்றது, வலி இருந்திருக்கின்றது, போராட்ட உணர்வு இருந்திருக்கின்றது, எங்களுடைய அர்த்தமுள்ள அரசியல் அபிலாஷை இருந்திருக்கின்றது.

இத்தனையாயிரம் மக்களுடைய விடுதலைக்காக அந்த மண்ணிலே தங்களுடைய உயிர்களை ஈர்ந்துபோன நாற்பதாயிரத்துக்கும் மேற்பட்ட மாவீரர்களது எண்ணமும், கனவும் இந்த கஞ்சியிலே இருக்கின்றது.

நான்கு லட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் அந்த மண்ணிலே வாழ்ந்துகொண்டிருந்தபொழுது, வெறும் 65 ஆயிரம் மக்கள்தான் வாழ்கின்றார்கள் என்று சொல்லி பொருளாதாரத் தடையை விதித்து உணவு பஞ்சத்தை ஏற்படுத்தி அந்த மக்களைத் திட்டமிட்டு கொலை செய்ய முயற்சித்த அந்த தருணத்தில் தான் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் அந்த கஞ்சித் திட்டத்தை அறிமுகப்படுத்தி பசியாற்றியிருந்தது.

அதன் காரணமாக படுகொலைக்கு உயிர்தப்பிய பலர் பசியிலிருந்து தப்புவதற்கான சூழலை தமிழர் புனர்வாழ்வுக்கழகம் ஏற்படுத்தியிருந்தது.

அதனை இன்று நாங்கள் நன்றியோடு நினைவுகூர வேண்டும். ஓர் இனத்தினுடைய விடுதலையிலே, போராட்டத்தின் சக்தியாக இருப்பது பட்டினி கிடத்து இந்த இனத்தின் விடுதலைக்காக உயிரை அர்ப்பணம் செய்வது. அந்த உன்னத தியாகத்தை இந்த மண் செய்திருக்கின்றது.

அந்தக் காலத்திலே கஞ்சிக்காக தாய் நின்றபொழுது, களத்தில் நின்ற பிள்ளை இன்று இல்லை. தங்கள் பிள்ளைகளுக்கு கஞ்சி வாங்கி ஊட்டிவிட வேண்டும் என்பதற்காக அந்த மண்ணிலே மனைவி நின்றபொழுது அந்த கணவர் இன்று இல்லை. அந்த கணவனும் மனைவியும் களத்திலே நின்றபொழுது அந்த கஞ்சிக்காக நின்ற பிள்ளைகள் இன்று இல்லை.

அத்தனை துயரத்தை இந்த அரசு ஏற்படுத்தியிருக்கின்றது. ஒரு திட்டமிடப்பட்ட இனப்படுகொலையை இந்த மண்ணிலே அரங்கேற்றி, அதன் உச் சத்தை முள்ளிவாய்க்கால் தொட்டிருக்கின்றது.

உலக வரலாற்றில் என்றும் பதிந்திருக்கப்படமுடியாத மிகக் கொடூரமான இனப்படுகொலையை இந்த மண்ணில் நிகழ்த்தியதன் சாட்சியாக எங்களுடைய உணர்வுகளோடு, உள்ளத்தோடு பின்னிநிற்கின்ற ஒரு பொருளாக இந்தக் கஞ்சி இருக்கின்றது. இந்த கஞ்சி எங்களுடைய எதிர்கால சந்ததியிடம் கொண்டு செல்லப்படும்.

எங்களுடைய மண்ணிலே மலர்கின்ற ஒவ்வொரு குழந்தையும் இந்த கஞ்சியினுடைய உணர்வையும், மகிமையையும் புரிந்துகொண்டு சக்தியுள்ள அரசியல் விடுதலையை பெற்றெடுப்பதற்கான உறுதியை இந்த கஞ்சி அளிக்கும். இந்த கஞ்சியை வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் வழங்குவதையிட்டு நாங்கள் நிறைவடைகின்றோம்.

இந்த கஞ்சியினுடைய ஒவ்வொரு பருக்களும், ஒவ்வொரு துளியும், வியர்வையையும், இரத்தத்தையும் எங்களுடைய சந்ததியிடம் கடத்திச்செல்லும். இந்த மண் நிம்மதியான விடிவைக் காண்கின்ற அடிப்படை நாளன்று இந்த கஞ்சி தேசத்தின் தேசிய உணவாக அங்கீகரிக்கப்படும் என்பது நம்பிக்கை. – எனத் தெரிவித்தார்.

# எமது ஜனநாயக ரீதியான போராட்டங்கள் தொடரும்

## கலையரசன் எம்.பி. திட்டவட்டம்



மாறி மாறி வந்த அரசாங்கங்கள் தமிழர்களை அழிக்க வேண்டும் என்ற அடிப்படையில் பல யுத்திகளைக் கையாண்டனவே தவிர எந்த அரசியல் தலைவர்களிடமும் நல்ல நோக்கம் இருக்கவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த.கலையரசன் தெரிவித்துள்ளார்.

கல்முனையில் இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது மேலும் தெரிவிக்கையில் –

தற்போது நாட்டின் வடக்கு, கிழக்கு தாயகத்தில் மட்டுமல்லாது உலகத்திலே பல நாடுகளிலும் முள்ளிவாய்க்கால் நினைவு வாரம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

அந்த வகையில் அம்பாறை மாவட்டம் கல்முனை மாநகரிலே கல்முனை மாநகரசபை உறுப்பினர்களால் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் அனுஷ்டிக்கப்பட்டது.

இந்த நாட்டில் ஒரு நிலையான சமாதானம் ஏற்பட வேண்டும். இங்கு வாழுகின்ற தமிழர்களுக்கு சமத்துவம், நீதி, நியாயம் நிலைநிறுத்தப்பட வேண்டும் என்ற அடிப்படையில் தமிழ் மக்கள் போராடியிருந்தார்கள்.

அந்தப் போராட்டம் ஜனநாயக ரீதியாகவும், ஆயுத ரீதியாகவும் 2009 இற்கு முற்பட்ட காலத்தில் இருந்தது.

இதில் கவனம் செலுத்தாத இந்த அரசாங்கம் தமிழர்களை அழிக்க வேண்டும் என்ற அடிப்படையில் பல யுத்திகளைக் கையாண்டு லட்சக்கணக்கான மக்களை ஒரு இடத்திலே கொத்துக் கொத்தாக அழித்த நாளாக இன்றைய நாளை நாங்கள் அனுஷ்டித்துக் கொண்டு வருகின்றோம்.

இந்த நாட்டிலே தமிழினத்துக்கு ஏற்பட்ட இந்த அவலநிலை இந்த நாட்டில் வாழுகின்ற எந்த இனத்துக்கும் ஏற்பட்டு விடக் கூடாது என்பதற்காகவும், இந்த இலங்கையிலே வாழுகின்ற தமிழ் மக்கள் தங்களது கலாசாரத்தை, இருப்பை நிலைநிறுத்த வேண்டும் என்பதற்காகவும் போராடியவர்கள்.

ஆனால் இந்த நாட்டை ஆண்டுவந்த எந்த அரசியல் தலைவர்களிடமும் ஒரு நல்ல நோக்கம் இருக்கவில்லை. அன்று முள்ளிவாய்க்காலிலே படுகொலை செய்யப்பட்ட எமது உறவுகளுக்கு இதுவரை எந்தத் தீர்வும் கிடைக்கப் பெறவில்லை.

சர்வதேச ரீதியாக வழங்கப்படுகின்ற ஆலோசனைகளைக் கூட ஏற்று இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதை உலக நாடுகளும் அறிந்து கொண்டுள்ளன.

அந்த வகையிலே இந்த நாட்டிலே வாழுகின்ற பூர்வீக இனம் தொடர்ச்சியாக இவ்வாறான அடக்குமுறைக்கு ஆளாகக் கூடாது என்ற அடிப்படையில் எங்களுடைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ச்சியாக எமது மண்ணிலே ஏற்பட்ட அவலங்களை நினைவுகூர்ந்து இவ்வாறான நிகழ்வுகளை நடத்திக் கொண்டிருக்கின்றோம்.

நிச்சயமாகத் தமிழர்களுக்கு ஒரு நிலையான சமாதானம் கிடைக்கப் பெற வேண்டும் என்ற எங்களது ஜனநாயக ரீதியான போராட்டம் தொடர்ந்து கொண்டே இருக்கும்.

இந்த அடிப்படையில், இப்போது வாழுகின்ற எமது இளைய சமூகம் எமது மண்ணிலே எமது இனம் வாழ்வதற்காக ஒன்றுபட்டு செயற்பட வேண்டும்.

அவ்வாறு வடக்கு, கிழக்கு இணைந்த மாகாணத்திலே தமிழர்கள் மட்டுமல்லாது ஏனைய இனங்களும் இணைந்து சமத்துவமான ஓர் அரசியற் கட்டமைப்பை உருவாக்குவதற்கு முன்நின்று உழைக்க வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

# சமய சீர்திருத்தவாதி ஞானசம்பந்தர்

- மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா -
(மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர், மெல்பேண், ஆஸ்திரேலியா)

தமிழை வளர்ப்பதற்கு வாழையடி வாழையாகப் பலர் தோன்றி தொண்டாற்றி இருக்கிறார்கள். தொல்காப்பியர்,வள்ளுவர், திருமூலர், இளங்கோவடிகள், நக்கீரர் என்று சொல்லிக் கொண்டே போகலாம். ஆனால் ஞானசம்பந்தப் பெருமான் இவர்கள் யாவரையும்விட தலை சிறந்த ஒருவராகவே திகழ்கிறார் எனலாம். சம்பந்தப் பெருமானுக்கு முன்பு வந்தவர்கள் – மக்கட் சமுதாயத்திலிருந்து – சற்று ஒதுங்கி நின்று, சிந்தனை என்னும் வானில் பறந்தவர்களாய், இருந்தே தமது ஆக்கங்களை ஆக்கினார்கள் என்பதை மறந்துவிடக் கூடாது. ஆனால் ஞானசம்பந்தப் பெருமானோ மக்களுடன் தாமும் கலந்து, ஊர் ஊராகச் சென்று அதுவும் நடந்தே சென்று மக்கள் பலர் சூழ தமிழ் பரப்பி நிற்கின்றார். அதுவும் இன்னிசையால் எந்தமிழினைப் பரப்பி நிற்கின்றார். சம்பந்தப் பெருமானுக்கு முன்னர் இப்படித் தமிழைப் பரப்பியவர்கள் இருந்தார்களா என்றால் இல்லை என்றுதான் எண்ணிட முடிகிறது. சம்பந்தப் பெருமானின் இந்த முயற்சி தமிழ் பரப்பும் முயற்சியில் ஒரு திருப்பம் என்றும், பெரு இயக்கம் என்றும், பெரும் புரட்சி என்றும் எடுத்துக் கொள்ளலாம்.

பல்வேறு கொள்கைகள், சூழ்நிலைகளால் சிதறுண்டு கிடக்கும் மக்களை அவர்கள் பேசும் தாய்மொழியின் வழியிலேதான் ஒற்றுமைப்படுத்தி, உணர்வினை ஊட்டி, கிளர்ந்தெழச்செய்து முன்னேற்றத்தை ஏற்படுத்தலாம் என்னும் சிந்தனை சம்பந்தப் பெருமானின் உள்ளத்தில் உதித்தமையால் – அதற்காக அக்காலச் சூழலில் அவர் இன்னிசையால் தமிழ் பரப்பிய பாங்கினை மெச்சாமல் இருக்கவே முடியாது. தமிழ் ஞான சம்பந்தன் என்று அந்தணராய்ப் பிறந்த ஒருவர் துணிந்து கூறினார் என்றால் அதுதான் சிறந்த சிந்தனைப் புரட்சி.

வேதநெறியினைக் காத்திட முனைந்தாரா? சைவநெறியினைக் காத்திட முனைந்தாரா? அல்லது தமிழ் மொழியினைக் காத்திட முனைந்தாரா? சீர்காழிதந்த திருவருட் செந்தமிழ்ச் செல்வர் திருஞானசம்பந்த பெருமான்! இது ஆராயப்பட வேண்டிய பெரியதோர் விடயம் ஆகும். சம்பந்தப்பெருமான் புனித வாய் மலர்ந்து அழுத காரணத்தால் வேதநெறி தழைத்தோங்கியது. மிகுசைவத்துறை விளக்கமுற்று நின்றது என்று சேக்கிழார் செப்பி நிற்பது நோக்கத்தக்கதாகும். அதே வேளை – நற்றமிழுக்க இன்துணை ஞானசம்பந்தன், தலைமகனாகி நின்ற தமிழ்



ஞானசம்பந்தன், தன்னொளி மிக்குயர்ந்த தமிழ் ஞானசம்பந்தன், காழி நற்றமிழ் ஞானசம்பந்தன், என்றெல்லாம் சம்பந்தப் பெருமானே தன்னை தமிழுடன் இணைத்து நிற்பதும் நோக்கத்தக்கதே.

குழந்தைப் பருவத்திலேயே இறைஞானம் சம்பந்தருக்கு கிடைத்து விட்டது. இறைவனே காட்சி கொடுத்து அருள்கொடுக்கும் வகையில் சம்பந்தர் திருவருட் செல்வராகி விடுகிறார். இதனால் குழந்தை ஞானியாயும் ஆகிவிடுகிறார். பக்தி இயக்கத்திலும், தமிழ் பரப்பும் இயக்கத்திலும் சீர்காழிதந்த திருவருட் செந்தமிழ்ச் செல்வரின் வகிபாகம் மிகவும் முக்கியத்துவம் மிக்கதெனலாம். வேறு எந்தவோர் மொழியிலும் பக்திப் பாடல்கள் என்று சொல்லும் வகையில் எதுவுமே இல்லை. தமிழ் மொழிக்கே மட்டும் உரித்தான ஒன்றாகவே பக்திப் பாடல்கள் விளங்குகின்றன.



## இன்று அவரது குருபூசைத் தினம்

பக்திப் பாடல்களில் ஞானசம்பந்தப் பெருமானின் பாடல்களும் அவைதரும் பொருள்களும் சமூகத்துக்கு நம்பிக்கையையும், உற்சாகத்தையும், உத்வேகத்தையும், ஊட்டுகின்றமையோடு தமிழில் பல்வேறுவகையான உத்திகளையும் கவிதையில் தருவதோடு நல்லதோர் தெளிவையும் நல்குவனவாக இருக்கின்றமை மனமிருத்த வேண்டிய விடயமாகும்.

இயற்கையின் அழகினை தமிழில் காட்டியவை சங்கப் பாடல்களாகும். அதற்கு அடுத்தபடி இயற்கையின் அழகினைக் காட்டும் பாடல்களை சம்பந்தப் பெருமானின் தேவாரப் பாடல்களில் காணமுடிகிறது என்பதும் குறிப்பிடப் படவேண்டியதே. இயற்கையைக் காட்ட முயன்றாலும் அதனூடாக இறைவன் உறையும் தலத்தையும் , இறைவனின் அருள் திறத்தையும் காட்டிடுவதிலும் பெரும் கவனமாகவும் இருக்கிறார். ஞானசம்பந்தப் பெருமான் 16,000 பதிகங்கள் பாடியிருக்கிறார் என்று நம்பியாண்டார் நம்பி குறிப்பிட்டாலும் தற்போது கிடைக்கும் மொத்தப் பாடல்கள் 4,181 மட்டுமேயாகும். 23 பண்களில் ஏறத்தாழ 110 சந்தங்களில் பாடல்களைத் தந்துள்ளார். சம்பந்தப் பெருமானை சந்தத்தின் தந்தை என்றே அழைக்கலாம். யமகம், மடக்கினைக் கையாண்டமையோடு சித்திரக்கவி என்பதனையும் முதலில் தொடக்கிய பெருமைக்கும் சம்பந்தப் பெருமான் உரித்துடையவராகிறார். சம்பந்தப் பெருமானின் சந்தம் விளையாடும் தமிழ்ப் பாடல்கள் பின்னர் வந்த அருணிகிரியாரின் சிந்தனைக்கும் உரமாய் அமைந்திருக்கலாம்.

சம்பந்தம் பெருமான் வாழ்ந்த சூழல் , சைவத்தை – சமணமும் பௌத்தமும் நசுக்கி இல்லாமலே செய்யும் நெருக்கடி நிலை நிலவிய காலமெனலாம். சமணமும் பௌத்தமும் துறவையும் அறத்தையுமே வலியுறுத்தி இல்லறத்தை ஒதுக்கி பெண்மையை புறந்தள்ளி யாவுமே மாயை என்று காட்டி நின்றன. கலைகளை இகழ்ந்தன. இசையை வெறுத்தன. ஆடல் பாடல்கள் ஒதுக்கப்பட்டன. இந்த நிலையில் குழந்தையிலே அம்மையின் ஞானப்பாலினை அருந்தி ஞானம் கைவரப் பெற்றவரான திருஞானசம்பந்தர் வருகை பெருந்திருப்புமுனையாக அமைகிறது.

**மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்**
**எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறையிலை**
**கண்ணில் நல்லஃதொறும் கழுமல வளநகர்**
**பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே**

எந்தப்பெண்ணை சமணமும் பௌத்தமும் ஒதுக்கியதோ, மண்ணிலே நல்ல வாழ்வைப்பற்றியே காட்ட முயலா சமணமும் பௌத்தமும் இருந்ததோ, அந்த நிலையைத் தகர்த்தெறிந்து மண்ணிலே நல்ல வண்ணம் வாழலாம், பெண்மையால் உயர்வு பெறலாம் என்று இறைவனுடன் இறைவியை இணைத்துக்காட்டி விடிவெள்ளியாய் நம்பிக்கையை ஊட்டியவர்தான் சீர்காழிதந்த திருவருட் செல்வர் திருஞானசம்பந்தர். தாய்மையின் தெய்வீகத் தன்மையினை சம்பந்தப்பெருமான் தனது பாடல்களில் காட்டுவதைத் தலையாய நோக்கமாகக் கொண்டிருந்தார் என்று தமிழறிஞர் தெ.பொ. மீ. அவர்கள் சுட்டிக் காட்டுவதும் மனமிருத்த வேண்டிய கருத்து. இந்த உலகத்தில் நல்லபடி வாழமுடியும் என்னும் நம்பிக்கையை ஊட்டி, நல்லகதி அடைவதற்கு எவ்வகையான குறையும் இல்லை என்னும் துணிவை ஊட்டுகிறார் சம்பந்தப் பெருமான். அவரின் பாடல்கள் சோர்வையோ , கலக்கத்தையோ, துன்பத்தையோ தரும் வகையில் அமைந்திருக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதே.

பெரியபுராணமே திருவருட் செல்வர்களின் பெருமைகளை எடுத்துச் சொல்லி நிற்கிறது. திருவருள் பெற்றவர்களைக் கண்டறிந்து தெய்வப் புலவர் சேக்கிழார் பெரியபுராணம் வாயிலாக பலவற்றை எடுத்துக் காட்டியிருக்கிறார். ஆனாலும் திருவருட் செல்வர்களின் வரலாறு கூறவந்த சேக்கிழார் அவர்கள் பெரியபுராணத்தில் பெரும்பகுதியை சீர்காழிதந்த திருவருட் செல்வருக்கே கொடுத்து விடுவதைக் காண்கிறோம். இதனாலன்றோ பிள்ளைபாதி புராணம்பாதி என்று புகலும் நிலையே உருவானது. சம்பந்தப் பெருமானை ஏன் இப்படி காட்டவேண்டிய தேவை சேக்கிழாருக்கு ஏற்பட்டது என்பது மிகவும் முக்கியமான விடயமாகும்.

சம்பந்தப் பெருமானைக் காட்டும் பொழுதே சேக்கிழார் வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத்துறை விளங்க பூதபரம்பரை பொலிய புனித வாய் மலர்ந்தழுத என்றுதான் காட்டுகிறார். இங்கு சொல்லப்பட்ட சொற்கள் மிகவும் முக்கியமானவை. வேதநெறி தழைத்தோங்க என்றால் , இதற்கு முன் வேதங்கள் இருக்கவில்லையா? சம்பந்தர் வந்து தான் வேதநெறியினை தழைத்தோங்கச் செய்யப் போகிறாரா என்னும் ஐயம் எழுகிறதல்லவா? சம்பந்தப் பெருமானே வேதநெறியில் வந்துதித்த பிராமணப் பிள்ளை. ஏற்கனவே வேதங்களும் அவற்றின் வழிவந்தவர்களும் அந்த நெறியும் இருக்க சம்பந்தர் எவ்வாறு வேதநெறி தழைத்தோங்க வந்தவராக முடியும் ?

வேதநெறி இருந்ததுதான். ஆனால் சம்பந்தர் காட்டும் வேதநெறி, சம்பந்தர் தழைத்தோங்க வைக்கும் வேதநெறி வேறுபட்டதாகும். அது சிவம் சம்பந்தப்பட்டது. சைவம் சம்பந்தப்பட்டது. இதனால் இந்தப் புது நெறியினை தழைக்கச் செய்யவும் அதன்வழி சிவம் சம்பந்தமான சைவம் என்னும் நெறியினை தழைக்கச் செய்யவுமான பெரும்பணியினை ஆற்றுவதற்கே சம்பந்தக் குழந்தை அழுதது. அம்மை அப்பனைக் கண்டது. அமுதமாம் ஞானப் பாலினை அருந்தியது. சிவஞானக் கொழுந்தாகி ஒளிவிட்டு பிரகாசித்தது என்பதையெல்லாம் சேக்கிழார் காட்டும் இப்பாங்குதான் திருவருளின் சிறப்பும் திருவருட் செல்வரின் சிறப்பும் எனலாம்.

**சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்**
**பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கியஞானம்**
**தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தார் அந்நிலையில்**

என்று – ஞானப்பால் உண்ட நிலையினை காட்டுகிறார் சேக்கிழார் பெருமான். ஞானப்பால் உண்டதனால் சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம் வந்துவிட்டது என்கிறார். வேதநெறியிலே வந்த சம்பந்தப் பெருமான் – சிவநெறியான வேதநெறியினை தழைத்தோங்க வந்தார் என்று சொல்லுவதும் , சைவநெறி தழைத் தோங்க வைக்க வந்தார் என்பதும் வேதநெறிக்கும் சைவநெறிக்கும் பாலமாகவும் அதே வேளை – நான்கு வேதங்கள் காட்டிநிற்கும் வேத நெறியை விட்டு சிவனை முழுமுதலாகக் கொண்ட வேத நெறியினை சைவ நெறியுடன் இணைத்து ஓங்கச்செய்யவே திருவருட் செல்வராக திருஞானசம்பந்தப் பெருமான் அவதரித்தார் என்பதுதான் சேக்கிழாரின் நோக்காகும்.

வைதிக மரபில் தோன்றிய சீர்காழி திருவருட் செல்வர் அந்த வைதிக மரபை மாற்றி சிவனுக்கு வேள்வியையும் சிவ வணக்கத்தையும் ஏற்படுத்தி வடமொழியை விட்டு தமிழ் மொழியில் வழிபாடு ஆற்றும் புது வழியை புரட்சியை உருவாக்கி ஞானக்கொழுந்தாய் நிமிர்ந்து நிற்கிறார். செந்தமிழை வழிபாட்டு மொழியாக்கிய வேதியரின் பிள்ளையான ஞானசம்பந்தப் பெருமான் செயலை எண்ணி எண்ணி வியக்க வேண்டி இருக்கிறதல்லவா? இன்று தமிழில் வழிபாடா, வட மொழியில் வழிபாடா என்றெல்லாம் வாதப் பிரதிவாதங்கள் எழும் நிலையில் இவையாவற்றுக்கும் பிராமணப் பிள்ளையும், கோவில் குருக்களின் தவப் புதல்வனும் ஞானவானுமாகிய சீர்காழிதந்த திருவருட் செந்தமிழ்ச் செல்வரே பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் தக்க பதிலை பொருத்தமான முறையில் தந்திருக்கிறார் என்பதை யாவரும் மனமிருத்துவதும் சிந்திப்பதும் மிக மிக முக்கியமாகும்.

ஞானப்பால் உண்டதும் அவரின் நாவினால் வெளிப்பட்டதே

**தோடுடைய செவியன் விடையேறியோர்**
**தூவெண்மதி சூடி என்னும் செந்தமிழ் வார்த்தைகளே.**
**நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தனாக இருப்பதையே அவர் விரும்பினார். வேதமரபில் வந்தவரே**

(08ஆம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதி வீட்டுக்கு செல்லாத வரை தொடர்ந்து இந்த குழப்பம் இருக்கும்!

## செல்வம் அடைக்கலநாதன் தெரிவிப்பு

புதிய பிரதமர் தெரிவு செய்யப்பட்டாலும் ஜனாதிபதி வீட்டுக்குச் செல்லாத வரை தொடர்ந்து இந்த குழப்பம் இருக்கும் என வன்னி நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

புதிதாக பிரதமர் பதவியேற்றது தொடர்பாகக் கருத்து தெரிவித்த போதே இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் –

புதிய பிரதமர் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். இந்த விடயத்தில் மக்களின் எதிர்ப்பு இருப்பதற்கு காரணம் "கோட்டா கோ கோம்" என்ற அடிப்படையில் ஜனாதிபதி இதற்குள்ளே இருந்து கொண்டு தன்னுடைய பரிவாரங்களைத் தெரிவு செய்திருக்கின்ற ஒரு சூழலை மக்கள் எதிர்க்கிறார்கள்.

அந்தவகையிலே புதிய பிரதமரை தெரிவு செய்து அடுத்த அமைச்சரவை அவர்களுடைய சகாக்களாக இருக்கின்ற சூழல் ஏற்படும்.

அதனால் மக்கள் எதிர்க்கின்ற வாய்ப்பு இருக்கிறது. ஜனாதிபதி அவர் கூறியது போல 19 ஆவது திருத்தச் சட்டம்மூலம் நாடாளுமன்றத்துக்கு அதிகாரங்களைக் கொடுக்கின்ற வகையிலே செய்து கொடுத்துவிட்டு அவர் வீட்டுக்குச் செல்ல வேண்டும்.

அப்படி செல்கின்ற போது தான் மக்கள் ஜனநாயக முறையான நாடாளுமன்றத்துக்கு ஆதரவைத் தருகின்ற வாய்ப்பு ஏற்படும். ஆகவே ஜனாதிபதி வீட்டுக்குச் செல்லாத வரைக்கும் தொடர்ந்து இந்த குழப்பம் இருக்கத்தான் செய்யும்.

அவர் 19 ஆவது திருத்தச்சட்டத்தை அல்லது 21 ஆவது திருத்தச்சட்டம் என்ற அடிப்படையில் நாடாளுமன்றத்துக்கு அதிகாரத்தைத் தந்து அந்த பதவியிலிருந்து விலகிச் செல்லுகின்ற சூழல் உருவாகும் மட்டும் இந்தப் பிரச்சினை தொடர்ச்சியாக இருக்கும் என்றுதான் கூற முடியும்.

ஏனென்றால் மஹிந்த ராஜபக்ஷ பரிவாரங்கள் இருக்க கூடாதென மக்கள் கோருகின்றனர். அந்த சூழலில்தான் மக்கள் பார்க்கின்றார்கள். அந்தவகையில் ஜனாதிபதி இருக்கும் வரைக்கும் இந்த எதிர்ப்பு தொடர்ச்சியாக இருக்கும் என சுட்டிக்காட்டியுள்ளார்.



## இரு ஊடகவியலாளர்களின் தொலைபேசிகள் நாடாளுமன்றத்தில் பறிமுதல் செய்யப்பட்டன

ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டம் முடிந்த பின்னர் அதனை காணொலிப்படுத்தினர் என்ற குற்றச்சாட்டின்பேரில் இரண்டு ஊடகவியலாளர்களின் கைத்தொலைபேசிகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

பிரகீத் பெரேரா மற்றும் கசுன் சமரவீர ஆகிய ஊடகவியலாளர்களின் தொலைபேசிகளை பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என எதிர்க்கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸ சபாநாயகரிடம் முறையிட்டார்.

நடப்பு பிரதமர் சுதந்திர ஊடகத்துக்கு சார்பானவர் என்ற அடிப்படையிலும் ஜனநாயகத்தின் நான்காவது தூண்என்ற அடிப்படையிலும்குறித்தஊடகவியலாளர்களின் தொலைபேசிகளே மீள வழங்கப்படவேண்டும் என்றுகேட்டுக்கொண்டார். இதற்கு பதிலளித்த சபாநாயகர், இது தொடர்பில் கவனம் செலுத்துவதாகத் தெரிவித்தார்

இதனையடுத்து உரையாற்றிய ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் மனுஷ நாணயக்கார, ஆளும் கட்சியின் சண்டித்தனம் காரணமாகவே நாட்டில் இன்று நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பிரச்சினை ஏற்பட்டுள்ளது என்று நினைவுப்படுத்தினார்.

## சமய சீர்திருத்தவாதி ............

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

**காதலாகிக் கசிந்துகண் ணீர்மல்கி**
**ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது**
**வேதம் நான்கினும் மெய்ப்பொரு ளாவது**
**நாதன் நாமம் நமச்சி வாயவே**

– வேதத்திலும் உயர்ந்தது சிவனைக்குறிக்கும் நமச்சிவாயவே என்றும் அந்த நாமத்தை உச்சரித்தால் நன்னெறிக்கே இட்டுச் செல்லும் என்று துணிந்து கூறித் தமிழின் ஆற்றலை வெளிப்படுத்தி அதனை சிவவழிபாட்டுடன் இணைத்து நிற்பதும் யாவரும் மன மிருத்த வேண்டியதேயாகும்.

வைதிக மரபில் வந்தவர், வேதங்களை அறிந்தவர், கோவில் பூசகரின் மகனாக இருந்தவர் – ஆனாலும் செந்தமிழையே நேசித்தார். செந்தமிழினால் எல்லாம் சிறப்புறும் என்றும் நம்பினார். செந்தமிழினால் பல அற்புதங்களையும் நிகழ்த்திக் காட்டினார். இது சைவ நெறிக்கும் சைவ பக்தி இயக்கத்துக்கும் பெரும் வலிமையையும் உத்வேகத்தையும் கொடுத்தது என்றே சொல்லலாம்.

பாம்பு தீண்டி இறந்த வணிகனை சடையாய் யெனுமால் சரண் நீ யெனுமால் என்று பாடியெழுப்பியதும், திருமறைக்காட்டில் கதவை மூடிட பாடியதும், பாண்டியன் வெப்புநோய் தீர்ந்திட மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு என்று பாடியதும், ஆண் பனைகளைப் பெண் பனையாக்கிட பூந்தேர்ந் தாயன கொண்டுநின் பொன்னடிக்கே என்று பாடியதும், மயிலாப்பூரில் இறந்து சாம்பலாக இருந்த பூம்பாவை என்னும் பெண்ணை மட்டிட்ட புன்னையங் கானன் மடமயிலை என்று பாடி உயிர்ப்பெறச்செய்ததும், செந்தமிழ் பாட்டுக்களே என்பது மிகவும் முக்கியமான விடயமாகும். தமிழுக்கு எந்தளவு ஆற்றல் இருந்தது என்பதை சீர்காழிதந்த திருவருட் செந்தமிழ்ச் செல்வர் நிரூபித்துக் காட்டியிருக்கிறார் என்பது சைவத்தின் பெருமையும் தமிழின் பெருமையும் தமிழுக்கு இறைவனே வசமாகி அருள் கொடுத்தான் என்பதும் நினைத்துப் பார்க்கவே மிகவும் பெருமையாக இருக்கிறது.

தமிழை வழிபாட்டுக்கு உரியதாக்கியதோடு மூடநம்பிக்கைகளையும் களைந்திடவும் முனைந்தார். சாதி வேறுபாட்டை அவர் விரும்பினார் இல்லை. வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன் பதிகத்தில் கோள்களினால் இடையூறு வருமென்று நம்ப வேண்டாம். வித்தையே உண்ட சிவபெருமானே உள்ளத்தில் இருக்கையில் கோள்களால் எதுவுமே ஆகிவிடாது. ஆசறு நல்ல நல்ல அவைநல்ல நல்ல – அடியார் அவர்க்கு மிகவே என்று நம்பிக்கை நவில்வது சம்பந்தப் பெருமானின் இறைபக்தியையும் , இறை பக்திக்கு முன்னால் நாளென்ன செய்யும்? கோளென்ன செய்யும்? என்னும் பக்தியின் வைராக்கியத்தையும், மூடத்தனமாக எண்ண வேண்டாம் என்னும் சிந்தனையையும் வெளிப்படுத்தி நிற்கிறது.

தீண்டத்தகாத குலத்தவராக இருந்த திருநீலகண்டர் என்னும் யாழ் வாசிப்பவரை தான் செல்லும் எல்லா இடங்களுக்கும் கூட்டியே சென்றார். அதுமட்டுமன்றி பிராமணர்கள் வாழும் தெருக்களுக்கும் வீடுகளுக்குமே அழைத்தும் சென்றார். திருநீலகண்டர் உள்ளே நுழைந்தால் – பிராமணர்கள் வளர்க்கும் வேள்வித்தீ அவிந்து குற்றம் ஏற்பட்டுவிடும் என்னும் எண்ணத்தை உடைத்தெறிந்து – அவரை வேள்வித்தீ இடம் பெறும் இடத்துக்கே அழைத்துச் சென்று முன்னரிலும் வேள்வித்தீ சுடர்விட்டு பிரகாசிக்கும் நிலையினைக் காட்டி , தீண்டாமை என்னும் வழக்கினை சிதறடிக்கச் செய்துநின்றார்.

சீர்காழிதந்த திருவருட் செந்தமிழ்ச்செல்வர் திருஞானசம்பந்தப் பெருமானின் பெருமையால் அவரை முருகனின் அவதாரம் என்றும் அழைத்தனர் என்பதும் நோக்கத்தக்கதாகும். முத்தமிழ்க் கடவுளாம் முருகப் பெருமனைத் தமிழர்கள் கொண்டாடிப் பெருமைப் படுவதையும் மனமிருத்தல் வேண்டும். ஆதிசங்கரரே திராவிடச் சிசு என்று விதந்தார் என்றும் அறிய முடிகிறது. இறைவனின் அருள் பெற்ற திருவருட் செல்வர்கள் என்னும் வகையில் பலர் சைவத்தில் இருந்தாலும் சீர்காழிதந்த திருவருட் செந்தமிழ்ச் செல்வரான திருஞானசம்பந்தப் பெருமான் மிகவும் சிறப்பும் பெருமையும் உடையவராக விளங்குகிறார்.

சைவச் சான்றோர்கள் பலர் இருந்தாலும் சம்பந்தப் பெருமான் அவர்களுக்குள் தலையானவராகவே விளங்குகிறார் என்பதை மறுத்துரைத்துவிட முடியாது. சம்பந்தப் பெருமானின் பின்னே வந்தவர்கள் எல்லோருமே அவரைப் போற்றிப் புகழ்ந்திருப்பதைக் காணமுடிகிறது. சம்பந்தப் பெருமானின் உள்ளத்தில் இருந்து வெளிவந்த பாடல்கள் அனைத்துமே தெய்வத் தீந்தமிழ் பொக்கிஷங்களே ஆகும். வேத நெறி தளைத்தோங்க – மிகு சைவத்துறை விளங்க மட்டும் சம்பந்தப் பெருமான் இம்மண்ணுக்கு வரவில்லை – செந்தமிழினை இன்னிசையால் பரப்பிடவும் வந்தார். எனவே அவரை திருவருள் மிக்க செந்தமிழ்ச் செல்வர் திருஞான சம்பந்தர் என்று ஏற்றிப் போற்றுவதுதான் சாலச் சிறந்ததாகும்!

## மன்னாரில் அமைக்கப்பட்டுள்ள சுற்றுலாமையம் அவலநிலையில்

### பொதுமக்கள் விசனம்





மன்னார் – மடு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள குஞ்சுக்குளம் தொங்கு பாலம் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள சுற்றுலா மைய கட்டடத்தொகுதி பாழடைந்த நிலையில் காணப்படுகின்றமை குறித்து மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கடந்த 2014 ஆம் ஆண்டு வடமாகாண சபையால் ஒதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியில் குஞ்சுக்குளம் தொங்கு பாலம் பகுதியில் அமைக்கப்பட்ட சுற்றுலா மையம் கடந்த 2016ஆம் ஆண்டு மார்ச் மாதம் 16ஆம் திகதி முன்னாள் வடமாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் மற்றும் அதிகாரிகளால் வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

மடு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள குறித்த சுற்றுலா மையம், நானாட்டான் பிரதேச சபையின் கட்டுப்பாட்டில் காணப்படுகின்றது.

இந்நிலையில் குறித்த சுற்றுலா மையம் தற்போது அடர்ந்த காடு போல் காட்சியளிப்பதோடு, குறித்த மைய கட்டடத்தொகுதி சேதமாக்கப்பட்டுள்ளதோடு, பொருள்களும் உடைக்கப்பட்டுள்ளன என பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

பல லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்டு மக்கள் பாவனைக்காகக் கையளிக்கப்பட்டு சுமார் 6 வருடங்கள் கடந்துள்ள நிலையில், இவ்வாறு சேதப்படுத்தப்பட்டு மக்கள் பாவனை இன்றி காணப்படுகின்றமை குறித்து உரிய அதிகாரிகள் கவனயீனமாக செயல்படுகின்றமை குறித்து மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக நானாட்டான் பிரதேச சபை துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என பொது மக்கள் மற்றும் நலன் விரும்பிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# தமிழ் வீர மறவர்கள் இருவரின் இறுதிமுச்சு முள்ளிவாய்க்கால்!

முள்ளிவாய்க்கால், இலங்கைத்தீவில் வடமாகாணத்தில் முல்லைத்தீவு மாவட்டத்தில் முல்லைத்தீவு நகரத்திலிருந்து ஆறு கிலோமீற்றர் தூரத்தில் வடக்கு நோக்கி அமைந்துள்ள ஒரு கடற்கரைக் கிராமமாகும்.

ஆனால் இன்று உலகளாவிய அனைத்துத் தமிழ் மக்களாலும் அன்றாடம் உச்சரிக்கப்படுகின்ற ஒரு சொல்லாகவும், உலகளாவிய அரசியல் மனித உரிமை ஆர்வலர்களாலும் பெரிதும் பேசப்படுகின்ற ஓர் இடமாகவும் அமைந்துவிட்டது.

இந்தக் கிராமம் கிழக்குப் புறத்தில் இந்துமா கடலையும் , மேற்குப் புறத்தில் ஒடுங்கிய நந்திக்கடல் நீரேரியையும், தெற்கே வட்டுவாகல் ஆற்றுக் கழிமுகத்தையும், வடக்கே வலைஞர் மடக்கிராமத்தையும் எல்லைகளாகக் கொண்ட ஒரு மணற்பாங்கான சமதரைப் பிரதேசமாகும்.



கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்தில் இலங்கைத்தீவின் வட பகுதியில் சமுத்திர வாணிபக் கலாசாரம் பரவியிருந்த காலத்தில் முள்ளிவாய்க்கால் ஒரு படகுத்துறையாக விளங்கியிருக்கிறது.

வரலாற்றுத் தொன்மை மிக்க பல்வேறுபட்ட படகுத் துறைகள் இலங்கையின் வடபகுதியிலேயே அதிகம் காணப்பட்டன. வங்காள விரிகுடாவில் ஏற்படுகின்ற நீரோட்டமும், பருவக் காற்றுக்களும் இந்தியத் துணைக் கண்டத்திலிருந்து இலங்கையின் வடபாகத்துக்கு பாய்மரக் கப்பல்களை ஓட்டிச் செல்ல இலகுவாய் அமைந்தன.

எனவேதான் இலங்கையின் வடகரையோரங்களின் கடற் கரையோரக் கிராமங்கள் படகுத் துறைகளாக விளங்கின. அந்த வரிசையிற்தான் முள்ளிவாய்க்காலும் படகுத் துறைமுகமாக விளங்கியது. இத்தகைய நீண்ட தொன்மை மிக்க முள்ளிவாய்க்கால் பிரதேசமும் ஐரோப்பியர் இலங்கையைக் கைப்பற்றிய பின்னரும் தனது முக்கியத்துவத்தை இழக்கவில்லை.

போர்த்துக்கேயர் ஆட்சிக்காலத்திலும் சரி, ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்திலும் சரி, ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலும் சரி ஒரு முக்கிய ஓடத்துறையாகவே விளங்கியிருக்கிறது. அத்துடன் முள்ளிவாய்க்காலை அண்டிய கடல்நீரேரிப் பகுதி சிறந்த உப்பு விளைவிக்கப்படும் பகுதியாக ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இருந்தது. முள்ளிவாய்க்கால் கிராமத்தில் பயிரிடப்பட்ட வெற்றிலைக்கு அன்றைய காலத்தில் பெரும் மதிப்பு இருந்தது.

முள்ளிவாய்க்கால் வெற்றிலை என்றால் அதற்கு




விலையும், போட்டியும் அதிகம். நந்திக் கடல் கடநீரேரிப் பகுதியில் பிடிக்கப்படும் இறால்கள் அதிக சுவை வாய்ந்தவை என அறியக்கிடைக்கிறது.

இதனை Manual of The Vanni District (Nothren Province) 1895 என்ற நூலில் j.p. Lewis என்ற அன்றைய கால ஆங்கிலேய மாவட்ட அதிகாரி குறிப்பிட்டுள்ளார். பிரித்தானிய ஏகாதிபத்தியத்துக்கு எதிராக போராடி கிளர்ச்சியில் ஈடுபட்ட பண்டார வன்னியனை இறுதியாக கண்ட இடமும் இந்த முள்ளிவாய்க்காலே என வரலாறு பதிவுசெய்திருக்கிறது.

அதாவது பண்டாரவன்னியன் 1811 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் பகுதியில் ஆங்கிலேயப்படைகளை தாக்கும் திட்டத்துக்கான ஒற்றிதல் நடவடிக்கைக்காக இந்தக் கிராமத்தில் நடமாடினான் என அன்றைய கால முள்ளிவாய்க்கால் பிரதேச அதிகாரியான கதிர்காம நாயக்க முதலியார் இலங்கையில் பிரித்தானிய ஆளுநரான ரேணருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

இவரே ஆங்கிலேயருக்கு பண்டார வன்னியனைக் காட்டிக்கொடுத்தவராவார். மாறாக பண்டார வன்னியன் நாட்டுக் கூத்தில் வரும் காக்கை வன்னியன் என்ற புனைகதைக் கதாபாத்திரம் இந்த கதிர்காம முதலியாரை வைத்தே புனையப்பட்டது. இதன்பின் பண்டார வன்னியனை வன்னியில் எங்கும் யாரும் கண்டதாகப் பதிவுகள் இல்லை.

எனவே முள்ளிவாய்க்காலுடன் பண்டாரவன்னியன் மௌனமாகி விட்டார்.

இந்த சரித்திர நிகழ்வின் பின் ஏறக்குறைய இரண்டு நூற்றாண்டுகள் கழிந்து தமிழர்களுக்கு தலைமை தாங்கிய இன்னுமொரு தலைமையையும் இறுதியாக காணப்பட்ட இடமாகவும் முள்ளிவாய்க்கால் அமைந்துவிட்டது(மே 2009). எனவே ஈழத்தமிழர் வரலாற்றில் இரண்டு தலைவர்களை இறுதியாகக் கண்ட மண்ணாக இந்த முள்ளிவாய்க்கால் மண்ணே அமைவதால் இதற்கு ஒரு வரலாற்று முக்கியத்துவம் உண்டு.

முல்லைத்தீவு இராணுவத் தளம் கைப்பற்றப்பட்ட பின்னர் இந்தப் பிரதேசம் தமிழர் சேனையின் சர்வதேச விநியோகத் தளமாகவும் விளங்கியது. உலக வரலாற்றில் மனிதகுலம் பல்லாயிரம் போர்க் களங்களைக் கண்டிருக்கிறது. ஒவ்வொரு போர்க் களங்களும் ஒவ்வொரு வகையான செய்திகளைச் சொல்லிச் சென்றிருக்கின்றன. போர் வெறிபிடித்த மொங்கொலியன் செங்கிஸ்கான் மத்திய ஆசிய நாடுகள் மீது மேற்கொண்ட போர்வெறி பல்லாயிரம் மக்களைக் கொன்றுகுவித்தது. மதவெறி பிடித்த முடவன் தைமூர் வட இந்தியாவைச் சிதைத்த போது மடிந்த மக்கள் லட்சத்தைத் தாண்டினர்.

நவீன உலகின் இனவெறியன் நாசிச ஹிட்லர் யூதர்கள் மீது திணித்த போர் பல லட்சம் யூதர்களை சாம்பலாக்கியது. இந்த வரிசையில் ஆர்மேனியா, கொசோவா, அல்பேனியா, பியபரா (நைஜீரியா), சூடான், எரித்திரியா, கிழக்குத் தீமோர் என போர் வெறியர்கள் நிகழ்த்திய மனிதப் படுகொலைகள் மானிட வரலாற்றில் என்றும் அழியாச் சுவடுகளைப் பதித்திருக்கின்றன.

காருணிய வள்ளல் புத்த பகவானின் போதனைகளைக் கையிலேந்தியவராக மஹிந்ததேரர் ஈழம் வந்தார். அவர் வந்தது அறத்தைப் போதிக்க என்கிறார்கள்.

ஆனால் அவர் “வழிவந்த” ராஜபக்ஷக்கள் கொலைத் தொழில் புரிய ஈழமண் புகுந்தனர். இருவரிலும் ஒரு ஒற்றுமை கண்டோம். இருவரது பயணமும் பௌத்தத்தின் பெயரால் நிகழ்ந்தன.

ஈழமண் பல பௌத்த வெறியர்களைக் கண்டிருக்கிறது. ஆனாலும் எல்லாவற்றுக்கும் மேலாக பௌத்தமத வெறியனாக தன்னை இனங்காட்டி நவீன துட்டகைமுனுக்கள் என்று தம்பெயரையும் பொறித்துக்கொண்டு இருக்கிறார்கள் மனிதகுலத்துக்கு எதிரான இம்மிகப் பெரும் குற்றவாளிகள்.

21ஆம் நூற்றாண்டில் மனித குலத்துக்கெதிரான மிகப் பெரும் இனப்படுகொலை முள்ளிவாய்க்கால் மண்ணிலேயே நிகழ்ந்தது. முள்ளிவாய்க்கால் என்பது ஈழத் தமிழினத்தின் இனப்படுகொலையின் குறியீடு. பாலையும், நெய்தலும் கலந்த அந்த வறண்ட மண்ணில் தமிழர் தேசத்தின் மைந்தர்கள் நிகழ்த்திய தனிச் சமர் தமிழர்களின் விடுதலைத் தாகத்துக்கு தக்கசான்று.

அந்த மண்ணில் ஊனுமின்றி, உறக்கமுமின்றி தமிழ் மக்கள் பூவும், பிஞ்சும், காயும் கனியுமாக இறுதி வரை போராடினார்கள். தாயின் மடியிலிருந்த குழந்தை குண்டுபட்டு இறந்தது தெரியாமல் இருந்தாள் ஒருதாய்.

மறுபுறத்தே தாயிறந்தது தெரியாத மகவு பாலூட்டியதே தாய் மடியில். குழந்தையின் இரண்டு கைகளும் இழந்ததையிட்டுத் துடித்தாள் ஒரு தாய். கருவுற்ற தாயின் வயிற்றில் குண்டுபட்டு வயிற்றின் படுகாயத்தினூடே சிசு வெளித் தொங்கியதை இவ்வையகம் எங்கும் பாத்ததுண்டா?. உலகில் மானிடம், மனிதநேயம் பேசும் மானிடவாதிகளுக்கும், ஜனநாயகவாதிகளுக்கும் ஈழத்தமிழ் மக்களின் அவலக் குரல் கேட்கவில்லையே!

அன்றைய நாள்களில் உலகத் தலைநகரங்களின் வீதிகளில் புலம்பெயர் தமிழர்கள் இறங்கி நீதி கேட்டு போராடிக்கொண்டிருந்த போதும் முள்ளிவாய்க்காலில் மக்கள் மடிந்து கொண்டுதான் இருந்தார்கள். மக்கள் உணவின்றி பட்டினியால் மடிந்தார்கள், குண்டுபட்டு மடிந்தார்கள், படுகாயமடைந்து மருத்துவச் சிகிச்சையின்றி மடிந்தார்கள். இரசாயனக் குண்டுக்கு இரையாகி மடிந்தார்கள்.

(10ஆம் பக்கம் பார்க்க)

# சொத்தெனச் சைவத்தைக் கருத்தினில் இருத்தினார்!

அமுதகுரல் கேட்டு அம்மையே வந்தாள்
ஆலவாய் அரசு அமைதியாய் இருந்தார்
உண்ணா முலையாள் உயர்ஞானப் பாலை
உண்ட பிள்ளையை உலகமே வியந்தது


உணர்வெலாம் ஞானம் ஊறிய பிள்ளை
தோடுடை செவியனாய் கண்டனர் இறையை
பாடினார் பரமனை பரவசம் ஆகியே
நாடினார் திருவருள் கடலினுள் மூழ்கினார்

திருவருள் செல்வராய் மலந்தனர் அவருமே
திருஞான சம்பந்தர் பெயரதாய் வாய்த்தது
பக்தியைப் பரப்பிட பரமனைப் பற்றினார்
சொத்தெனச் சைவத்தைக் கருத்தினில் இருத்தினார்

குழந்தையாய் இருந்தவர் குமரனாய் வளர்ந்தனர்
குவலயம் சிறந்திட ஞானத்தைக் கொடுத்தனர்
கோவிலை மையமாய் கொண்டுமே சேவையை
வாழ்வினில் இருத்தியே மகிழ்ந்திட்டார் சம்பந்தர்

இளமையில் ஞானியாய் எழுந்தனர் சம்பந்தர்
இன்தமிழ் மொழியினை ஏந்தினார் நாளுமே
பக்தியைப் பரப்பிட பைந்தமிழ் மொழியினை
சித்தத்தில் இருத்தியே செப்பினார் தத்துவம்

முத்தாய் வைரமாய் பவளமாய் குவிந்தன
முத்திக்கு வித்தாக கருத்துகள் பொலிந்தன
அனுதினம் அடியவர் சூழ்ந்திடச் சம்பந்தர்
ஆலய மெங்கனும் அரன்புகழ் பரப்பினார்



மந்திரமும் நீறென்றார் தந்திரமும் நீறென்றார்
வானவர் மேலேயும் நீறென்றார் சம்பந்தர்
சுந்தரமும் நீறென்றார் சுகமுமே நீறென்றார்
நந்துயரைப் போக்குவது நாளுமே நீறென்றார்

முத்தியைச் சத்தியத்தை முழுமையாய் தருமென்றார்
பக்தியினை பக்குவத்தை பாங்குடனே தருமென்றார்
சித்தியைத் தருமென்றார் சீலத்தைத் தருமென்றார்
நித்தமுமே நீறதனை நெஞ்சிருத்த வேண்டுமென்றார்

பூசவினியது என்றார் பேசவினியது என்றார்
ஆசையறுப்பது என்றார் அகந்தை ஒழிப்பது என்றார்
தேசம்புகழ்வது என்றார் திருவாய் பொலிவதும் என்றார்
வாழுநினைப் பார்க்கெல்லாம் மருந்தாகும் நீறென்றார்

புனைந்தார் பலபாடல் அணைந்தார் அரனடியை
இணைந்தார் திருக்கூட்டம் எடுத்தார் தமிழ்மொழியை
கொடுத்தார் பலகருத்தை குழந்தைஞானி சம்பந்தர்
தடுத்தார் சமண்புயலை சைவத்தின் தலைமகனாய்

அப்பரொடு சேர்ந்தார் ஆன்மீக வழிநடந்தார்
அரனாரின் திருவருளால் அமைத்திட்டார் சத்சங்கம்
அனைவருமே அகிலத்தில் நல்லவண்ணம் வாழலாம்
எனுங்கருத்தை விதைத்திட்டு ஏற்றமுற்றார் சம்பந்தர்

– மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா – மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண், ஆஸ்திரேலியா

# தமிழ் வீர மறவர்கள் இருவரின் ............

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாம்புகடி,விஷ ஜந்துக்களின் கடிகளுக்கு எல்லாம் பலியாகி மாண்டனர், சனநெரிசலில் அகப்பட்டு மடிந்தனர். எல்லாவற்றிற்கும் மேலாக 2009 மே மாதம் 16, 17ஆம் நாள்களில் நிகழ்ந்த கொடுமை உலகில் எங்கேனும் நடந்ததுண்டா? அந்தக் கொலைகாரக் ஹிட்லர்கூட கொன்றதன் பின்தான் யூதர்களைப் புதைத்தான், எரித்தான். ஆனால் முள்ளிவாய்க்காலில் சிங்களமோ உயிருடனல்லவா ஈழத்தமிழினத்தைப் புதைத்தது.

ஒன்றா இரண்டா சுமாராக ஒரு லட்சத்து 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஈழத்தமிழ் மக்களை முள்ளிவாய்க்கால் மண்ணில் புதைத்தது சிங்கள பௌத்த பேரினவாதம். உலக இராணுவ வரலாற்றில் எந்தவொரு இராணுவமும் செய்திராத கீழ்த்தரமான, மிருகத்தனமான ஈனச்செயல்களை அங்கே ஈழத்தமிழினத்தின் மீது கட்டவிழ்த்து விட்டிருந்தது. அங்கே களத்திலே வீழ்ந்த பெண்களின் துயிலுரிந்த படைவீரர்களையும், பிணத்துடன் புணர்ந்த காமுகப் படைகளையும் முள்ளிவாய்க்கால் மண் கண்டது.

இறந்த பெண்களின் மார்பினை அறுத்த சிங்களப் படையின் கொடுமையை யாரும் அறிந்ததுண்டா? மனித மொழிகளில் சொல்ல முடியாத இன்னும் எத்தனை எத்தனை கொடுமைகள் உள்ளனவோ அத்தனை கொடுமைகளும் அந்த முள்ளிவாய்க்கால் மண்ணிலே நடந்தேறின.

அத்தனை கொடுமைகளையும் மனித மொழியில் சொல்லிடவியலாது! முள்ளிவாய்க்காலில் ஈழத்தமிழ் மக்கள் எழுப்பிய மரண ஓலங்கள் ஆன்ம ஓலங்களாகத் தமிழ்த் தேசியத்தின் நெஞ்சில் ஒலித்துக் கொண்டிருக்கிறன.

முள்ளிவாய்க்கால் மண்ணில் சிங்களப்படை கொலைவெறியாட்டத்தை நிகழ்த்துவதற்குத் தடையாகத் தமிழின வீரர்கள் நடத்திய தனிச்சமர் தமிழீழ விடுதலை இலட்சியத்தின் பற்றுறுதிக்கு தக்க சான்று. நாற்புறமும் பல்லாயிரம் எதிரிகள் சூழ்ந்துகொண்டு சர்வதேச நாடுகளின் ஆயுத தொழில்நுட்ப உதவியோடு நிகழ்த்திய கொடும் போரை எதிர்கொண்டு பல்லாயிரம் எதிரிகளை வீழ்த்திய சிலநூறு புலிவீரர்களின் வீர உடல்கள் அந்த மண்ணிலே வீழ்ந்ததைத்தான் எப்படி மறப்போம். தம் இறுதி மூச்சுவரை தமிழீழ இலட்சியத்துக்காக அவர்கள் சிந்திய குருதிதான் வீணபோகுமா!

தமிழீழம் என்கின்ற தணியாத இலட்சியத்துக்காக எத்தனை கொடிய துன்பங்களையும், சுமக்கத் தயாராகிய வன்னியின் நான்கரை லட்சம் மக்களின் அவலம் தோய்ந்த முள்ளிவாய்க்கால் வாழ்வை எப்படித்தான் மறக்க முடியும்?

முள்ளிவாய்க்கால் என்கின்ற போது ஒவ்வொரு ஈழத் தமிழனது நரம்புகளும் முறுக்கேறும். இதயத் துடிப்பு அதிகரிக்கும், நெஞ்சம் கனக்கும், தமிழீழம் என்ற இலட்சியக் கனவு உயிர் பெற்று அவர்களை வழிநடத்தும்.

இத்தனை தகதிகளும் அந்த முள்ளிவாய்க்காலுக்கு எப்படி வந்தது? நஞ்சு மாலைகள் களத்திலே வீழ்ந்ததாம், அஞ்சிடாதார் உடல்கள் அங்கே அழிந்துபோனதாம், குஞ்சு குருமன்களும் குண்டுபட்டுச் சிதைந்துபோனதாம்.

ஆயிரம் ஆயிரம் ஆண்டு வரலாற்றின் பின் போர்க்களத்தில் தமிழினம் ஆடிய வெஞ்சமரது. அந்த முள்ளிவாய்க்கால் போர்க்களத்தின் கொடுமையை அப்பெருந்துன்பத்தை எப்படிச் சுமப்பது என்ற கேள்வி எழுகிறது. இறுதி யுத்தத்தின் போது தமிழ் மக்கள் முள்ளிவாய்க்கால் பகுதியிலேயே ஒதுங்கிப் பாதுகாப்புத் தேடினர்.

இச்சிறு பிரதேசத்துக்குள் நான்கு லட்சத்து இருபத்தாறாயிரம் மக்கள் ஒதுங்கியதால் சிங்களப் பேரினவாதம் இப்பகுதியில் வைத்தே பெரும் கொலைவெறியாட்டத்தை நடத்தியது. இதனை அன்றைய காலத்தில் பார்வையிட்ட பன்னாட்டு தொண்டு நிறுவன அதிகாரி ஒருவர் முள்ளிவாய்க்கால் கடற்கரையோரத்தை உலகின் மிகநீண்ட கழிப்பறை எனக் குறிப்பிட்டார்.

இன்னுமொரு அதிகாரி உலகின் நீண்ட இடுகாடு எனவும் குறிப்பிட்டதிலிருந்து அந்தப் பகுதியில் தமிழர்கள் மீது நிகழ்த்தப்பட்ட கோரமான மனிதப் படுகொலையும் பேரழிவும் வெளிப்படுகின்றது.

தமிழ் மக்கள் எதிர்கொண்ட பேரவலத்தையும் உணர முடிகிறது. ஈற்றில் தமிழ் மக்கள் தம் எதிரியிடம் தாய்க்கு முன் வயதுவந்த மகனும், தந்தைக்கு முன் வயதுவந்த மகளும் மேலதிகாரிக்கு முன் சிற்றூழியரும் ஆசிரியருக்கு முன் மாணவியும் ஆசிரியைக்கு முன் மாணவனும் என அனைவரும் எந்த வேறுபாடுமின்றி ஆடைகள் களையப்பட்டு நிர்வாணமாக எதிரிமுன் நிறுத்தப்பட்டனர்.

மானத்துக்காக உயிர்துறந்த மானத் தமிழினம் அன்று முள்ளிவாய்க்கால் மண்ணில் உயிர்காக்க எதிரியிடம் நிர்வாணமாக சரணடைய நேர்ந்தது. இந்தப் பெரும் வடுவை தமிழினம் உள்ளவரை முள்ளிவாய்க்கால் என்ற நாமத்தை வாயில் உச்சரித்துச் சுமக்கத்தான் போகிறது. 2009 இறுதி யுத்தத்தின் போது முள்ளிவாய்க்கால் மண்ணில் ஒரு லட்சத்து நாற்பத்து ஆறாயிரம் மக்கள் படுகொலை செய்யப்பட்டார்கள் என, 2014 ஜனவரி எட்டாம் திகதி அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள விசேட போர்க்குற்ற நிபுணர் ஸ்டீபன் ராவுக்கு யாழ்ப்பாண ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் அடிகளும், மன்னார்ஆயர்இராசப்புயோசப்அடிகளும்ஆவணங்களைச் சமர்ப்பித்திருந்தனர் பிரித்தானிய ஊடகமான சனல் – 04 நிறுவனத்தின் தொடர் ஆவணப்படமான Killing Field முள்ளிவாய்க்கால் மண்ணில் நடந்த படுகொலைகளை ஆவணப்படுத்தியிருந்தது .

அது முள்ளிவாய்க்கால் மண்ணில் நிகழ்ந்த காட்டுமிராண்டித்தனமான படுகொலையை உலகுக்கு வெளிக்காட்டியிருந்தது. தமிழீழ விடுதலைக்கான ஆயுதப் போராட்டம் ஈழத் தமிழினத்தை முள்ளிவாய்க்காலில் கொண்டுவந்து நிறுத்தியிருக்கிறது.

எங்கு அந்த மக்கள் நிறுத்தப்பட்டார்களோ அங்கிருந்துதான் அடுத்தகட்ட போராட்டப் பயணத்தை முன்னெடுத்துச் செல்லமுடியும். ஆயுதப் போராட்டம் எதனை அந்த மக்களிடம் இறுதியாகத் தந்திருக்கிறதோ அதனை வைத்துக்கொண்டுதான் அடுத்தகட்ட வரலாற்றுப் பயணத்தை அவர்களால் தொடர முடியும்.

2009 மே 17 முள்ளிவாய்க்கால் மண்ணில் தம் முறவுகளின் பிணக்குவியலின் மீது ஏறிக்கடந்து அந்த மண்ணைவிட்டு வெளியேறிய தமிழீழ மக்கள் ஞானம் பெற்றனர். அந்த மண்ணிலிருந்து ஞானம் பெற்று மீண்டவர்களிலிருந்து அறிஞர்களும், ஞானிகளும், இலக்கியக் கர்த்தாக்களும், படைப்பாளிகளும், தீர்க்கதரிசிகளும் முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் வலிகளைச் சுமந்து முளைத்தெழுவர்.

அவர்கள் வரப்போகும் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கான ஞானோதயமாய் எதிர்கால மனிதகுல வரலாற்றுக்கான வழிசமைக்கும் பிரமாக்களாக விளங்குவர்.

முள்ளிவாய்க்கால் மண்ணில் மக்களை இனப்படுகொலை செய்ததன் மூலம் தமிழீழத்தின் இராணுவபலம் உடைக்கப்பட்டு தமிழீழ நிழல் அரசு தற்காலிகமாக வீழ்த்தப்பட்டது. முள்ளிவாய்க்கால் தமிழீழ இலட்சியத்தின் முடிவல்ல.

அது தமிழீழத்தின் கருத்தரிப்பு. சிங்களம் முள்ளிவாய்க்காலில் முடிவுரை எழுதியதாக எக்காழமிடலாம் . அது தமிழினத்தின் எழுச்சிக்கான ஒரு புதிய கட்டம். உலக வரலாற்றில் ஒடுக்கப்பட்ட இனம் ஒடுங்கிக் கிடந்ததான வரலாறு எங்குமில்லை.

அப்படியிருக்க ஒடுக்கிய சிங்களம் ஓய்வெடுப்பதா? முள்ளிவாய்க்காலில் ஒடுங்கிய தமிழனத்தின் ஆன்ம ஓலம் ஒடுங்கித்தான் கிடக்குமா? உலகத்தமிழினமே விழித்திரு, வெறித்திரு, தெளிந்திரு, நாளைய போரை அவர்களுக்காக முன்னெடுக்க வேண்டும் என்பதே வரலாற்றின் கட்டளையாகும்.

- முள்ளியூரான் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.



- செல்லத்துரை ரவீந்திரன் -

**அங்கம் -14**

# புலம்பெயர் மக்களின் எதிரொலியும் தாக்கமும்



**இன்னும் உறங்கும் இனக் குரோதம்**

காலிமுகத்திடலில் நல்லெண்ணத்திற்கான பல சமிக்ஞைகள் தெரிந்தன.

அவற்றின் முனைப்பில், முன்னர் நாடளாவிய முறையில் இனப்பிரச்சினையை வைத்தே பேரினவாதத்தை வளர்த்து, அரசியல்வாதிகள் பிழைப்பு நடத்தி, நாட்டை இந்த நிலைமைக்குக் கொண்டு வந்தார்கள் என்ற விழிப்புணர்வும் வந்தது என்றே எண்ணத் தோன்றியது.

அரசியல் பாரபட்சமற்ற வகையில் பணியாற்றும் பல நிறுவனங்களும், கட்டமைப்புகளும் அவற்றை எடுத்துச் சொல்லி ஒரு நீதியான, நியாயமான சமூகத்தை நோக்கி நாடு போக வேண்டும் என்று வெளிப்படையாகவே பேசுகிறார்கள் என்று உருவகப்படுத்தப்பட்டது.

நாட்டின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு அத்திவாரமாக இருப்பது பேரினவாதமும் அதன் மேலாண்மை ஒடுக்குமுறைகளும்தான் என்பதை எல்லோரும் விளங்கிக் கொள்கிறார்கள் என்பது போலவே சமிக்ஞைகள், பிரதிபலிப்புகள் வெளிக் காட்டப்பட்டன அல்லது வெளிப்பட்டன.





ஆனால் அவற்றுக்கு முகம்கொடுத்து, அவற்றைப் புரிந்து, தீர்த்துக்கொண்டு, தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல எந்த சிங்களத் தலைவருக்கும் திராணியில்லை. எந்தப் பெரும்பான்மை அமைப்பும் அதனை முதலாவதாக செய்து முடியுங்கள் என்று கூறவில்லை.

எல்லோரும் மதில் மேல் பூனைகள் போல அதனைச் செய்வது நல்லது என்று கோடி காட்டுகிறார்களே ஒழிய, எவரும் தமிழ் மக்கள் கேட்ட வகையில் சமஷ்டி அல்லது போருக்குப் பிறகு உத்தரவாதமளிக்கப்பட்ட 13 பிளஸ் போன்றவற்றை இனியாவது தாமதிக்காமல் ஏற்படுத்தி, தமிழ் மக்களையும் ஒரு நாட்டு மக்களாக உள்வாங்கி, பொருளாதார மீளாக்கத்திற்கு முறையான கட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று ஆணித்தரமாகக் கூறிச் செயற்படவில்லை.

நல்லாட்சி காலத்தில் அரசமைப்புச் சட்டத்தில் இருந்த பதிமூன்றாம் சட்டத்தையே சில அதிகார நடைமுறைப்படுத்தலுக்கான மாற்றங்களைச் செய்து முன்எடுக்காமல் ரணில் கூட்டமைப்புக்கு கஞ்சி வார்த்தார்.

கூட்டமைப்பினரோ இதோ ஒரு புதிய அரசமைப்புச் சட்டத்தினால் தாங்கள் கூழ் காய்ச்சி விட்டோம் என்று பேசித் திரிந்தார்கள்.

காலிமுகத்திடல் செயற்பாடுகளின் எதிரொலியாக, சஜித் பிரேமதாஸ தான் ஆட்சியை அமைத்தால் 13ஆம் சட்டத்திருத்தத்தை அப்படியே அமல்படுத்துவேன் என்று அறிவித்தார். இதுவரை அவர் ஆட்சியமைக்க வழிகள் வரவில்லை. அரசை பொறுப்பெடுத்த ரணிலோ அதனைப் பற்றி அலட்டிக் கொள்பவராகத் தெரியவில்லை.

சிங்கள பெரும்பான்மையினர் இன்றைய நிலையில் ராஜபக்ஷக்களை அதிகாரத்திலிருந்து நீக்கவும், பொருளாதார மீட்சிக்கான அனுகூலங்களைப் பெறுவதையும்தான் பார்க்கிறார்கள் என்பதை தமிழ் மக்கள் திட்டவட்டமாக உணர்ந்து கொள்ள வேண்டும். காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் தாங்கள் தங்களுக்கு அரசாட்சி கேட்டு வரவில்லை. ஆனால் அதே நேரம் அவர்கள் கூட, ராஜபக்ஷக்கள் நடத்திய இன அடக்குமுறைகளுக்காகவும் அட்டூழியங்களுக்காகவும் அந்த ஆட்சி நீக்கப்பட வேண்டும் என்று முதல் குரல் எழுப்பவில்லை.

அதே வேளை, நீண்ட பல தசாப்தங்கள் புரையோடிப்போன குரோதத்தை சில தினங்களில் மாற்றுவது என்பதும் இயலாத காரியம்தான். ஆனால் ஒரு தொடக்கம் வரவேற்கப்பட வேண்டும். அது முன்னேறுவதற்கு தமிழ் மக்களின் அனுசரணையும் முக்கியம்.

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறுபதம் என்று பார்த்தால், இரு இனங்களுக்குமே முக்கியமான கோட்பாடுகள், அதனால் எழும் குரோதங்கள் குறைவடைவனவாகவோ, அவற்றில் விட்டுக் கொடுப்பதற்கு இடமேற்படுவதாகவே தெரியவில்லை. அதற்கு இடமில்லை என்பது போன்ற தொனியே தென்படுகின்றது

ஆஸ்திரேலியாவை மத்திய படுத்திப் பார்த்தால் ராஜபக்ஷக்களின் வெளியேற்றத்தை வற்புறுத்தி சிட்னியில் ஆதரவு ஆர்ப்பாட்டம் ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டது. அதற்கு ஆதரவு திரட்ட சில தமிழ் அமைப்புகளோடு பேச்சுக்கள் நடத்தப்பட்டாலும் இணக்கங்கள் பிறக்காததால் இணைப்பு வரவில்லை.

அரசியல்தீர்வு – அது எந்தவிதத்தில் என்ற விடயத்தை அவர்கள் ஆர்ப்பாட்டத்தின்போது முன்னெடுக்க விரும்பவில்லை.

பின்னர் கடந்த வாரம் முடிவில் மெல்பேர்னில் இன்னுமொரு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. தமிழ் மக்களையும் பங்கு பெறுமாறு பொது அழைப்பு விடுக்கப்பட்டது. இரண்டு ஆர்ப்பாட்டங்களிலும் சில தமிழ் மக்கள் தனிப்பட்ட ரீதியில் கலந்து கொண்டார்களானாலும் ஒரு குழுமமோ அல்லது சிலரோ தமிழ் மக்களின் இனப்படுகொலைகளுக்கும் நியாயம் வேண்டும் என்ற பிரசுரங்களை ஆர்ப்பாட்டக்காரர்கள் இடையே கையளிக்க, அதில் சிலர் வாங்க மறுத்தமையும், சிலர் வாங்கி கிழித்தெறிந்தமையும் சமூக ஊடகங்களில் பரவலாக அம்பலமாகின். கிழித்தெறியும் போது சொல்லப்பட்ட வார்த்தைகளும் புரையோடிப்போயுள்ள இனக் குரோதம் எவ்வளவு ஆழமானது என்பதை உணர்த்துகின்றன. ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்து நடத்தியவர்கள் நிலைமையை உணர்ந்து சமயோசிதமாக நடந்தனர்.

நல்ல சமிக்ஞைகள் எழுந்தாலும், அவை தமிழ் மக்களைப் பாயசத்துக்கான பருப்பு மாதிரி பாவிக்கவா அன்றில் வாசத்திற்கான கருவேப்பிலை மாதிரிப் பயன்படுத்தவா என்பதைப் புரிய வேண்டும்.

இரண்டு பக்கங்களிலும் இப்படியான ஆழமான உணர்வுகள் கொண்டவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு நிலைமையை – உண்மையை – யதார்த்தத்தை –நீதியை – நியாயத்தை – புரிய வைக்க வேண்டும். அவற்றிலிருந்து மேலெழுந்து வரவேண்டுமென ஆர்ப்பாட்டத்தை ஏற்படுத்தியவர்கள் கருத்துச் சொல்கிறார்கள். அவை வரவேற்கத்தக்கவை.

ஆனாலும் ராஜபக்ஷவின் பேரினவாத மேலாதிக்கத்தின் பிரதிநிதியாக ரணிலைத்தான் உருவாகி உள்ளது என்பதை காலிமுகத்திடல் புரிந்து கொள்ளுதல் மிக முக்கியம். அதனைப் புரிந்து கொள்ளுதலில் புதிய அணுகுமுறை அவசியம். அதை விட்டு விட்டு பழைய சுலோகங்களை ஜெபிப்பது எந்தவிதமான பலனை தரும் என்பதை ஆராய வேண்டும்.

(வளரும்)